# இயேசுவே வாரும்

ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும். வெளி.22:20

சகோ. காலேப் யோசுவா

2வது குறுக்குத் தெரு, 11.திருமால் நகர்
பூவிருந்தவல்லி, சென்னை. 600 056

## BLESSED BE THE NAME OF THE LORD
## கர்த்தருடைய நாமம் ஆசீர்வதிக்கப்படுவதாக
## இது சென்னை சபையின்
## பேய்த்தனத்துக்கடுத்த தமிழ் மொழிபெயர்ப்பு

| | |
|---|---|
| **BLESSED BE THE NAME OF THE LORD**<br>கர்த்தருடைய நாமத்துக்கு ஸ்தோத்திரம் | : பரிசுத்த ஆவியினால் யோபு 1:21ன் தமிழ் மொழிபெயர்ப்பு |
| **BLESSED BE THE NAME OF THE LORD**<br>கர்த்தருடைய நாமம் ஆசீர்வதிக்கப்படுவதாக | : லௌகிக ஞானத்தினால் சென்னை சபை பாஸ்டர் ஐசக் வசந்தக்குமாரின் தமிழ் மொழிபெயர்ப்பு |
| கர்த்தருடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனி | : ஸ்தோத்திரம். எபி.13:15. |
| கர்த்தருடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனி | : ஆசீர்வாதம். பாஸ்டர் ஐசக் வசந்தக்குமார் |

1. நமக்குள் நிலைநிற்கிறதும், என்றென்றைக்கும் நம்மோடிருப்பதுமாகிய சத்தியத்தினிமித்தம்; தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களுக்கும், சத்தியத்தை அறிந்திருக்கிறவர்களுக்கும் மற்றும் சென்னை சபையாருக்கும் சுவிசேஷகனாகிய காலேப் யோசுவா எழுதுகிறதாவது:
பிதாவாகிய தேவனாலும் பிதாவின் குமாரனாயிருக்கிற கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும், கிருபையும் இரக்கமும் சமாதானமும்; சத்தியத்தோடும் அன்போடுங்கூட, உங்களோடிருப்பதாக.

2. பாஸ்டர் தெயுதாஸ்சைப் போன்றும், கலிலேயனாகிய பாஸ்டர் யூதாஸ்சைப் போன்றும் லௌகிக ஞானத்தினாலும், மாயமான தந்திரத்தினாலும் தனக்குத் துதிபாட, ஆம் ஐயா, ஆம் ஐயா என்று தனக்கு முன் கைக்கட்டி நிறக சுமார் 200 இடது கைக்கும், வலது கைக்கும் வித்தியாசம் தெரியாத ஆத்துமாக்களை தந்திரமாகக் கொள்ளைக்கொண்டு, தனது ஆளுகைக்குள் கொண்டு வந்ததின் பேரில் தன்னை ஒரு பொருட்டாக எண்ணிக்கொண்டு பாஸ்டர் ஐசக் வசந்தக்குமார் தன் சுயஇச்சையின்படியே நடந்து, தன் வாயினால் இறுமாப்பானவைகளைப்பேசி **(நான் சென்னை சபையின் ஆவிக்குரிய புருஷன்)** வேதவாக்கியங்களை அவ்வப்போது தன் ஜென்மசுபாவ ஞானத்தினால் புரட்டி, தனது கோட்பாடுகளுக்கு ஏற்றாற்போல் அவைகளை மாற்றி அமைப்பதை நீங்கள் கடந்த இரு செய்தித்தொகுப்புகள் மூலம் அறிய வந்திருப்பீர்கள் என கிறிஸ்துவுக்குள் நம்புகிறேன். வேதவாக்கியங்களில் காணப்படாத, ஆனால் சென்னை சபையில் மட்டும் காணப்படும் திருமண முத்தம், கர்த்தருடைய இராப்போஜனத்தை மாலை வேளையில் ஆசரிப்பது பற்றி இரு செய்தித்தொகுப்புகளை எழுதி, அப்படிப்பட்ட மாறுபாடான உபதேசங்களிலிருந்து சென்னை சபையார் தங்களை காத்துக்கொள்ளும்படி எழுதினேன். ஆம், அதை நான் கர்த்தரால், அவருடைய சரீரமாகிய சபை பக்திவிருத்தியடைய சுவிசேஷகனாக ஏற்படுத்தப்பட்டவன் என்ற தகுதியின் அடிப்படையில் எழுதினேன். ஆனால் அதை உலகத்தின் ஆவியைப் பெற்றவர்கள் நிராகரித்தனர். தேவனிடத்திலிருந்து புறப்படுகிற ஆவியைப் பெற்றவர்கள் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானித்தார்கள், பற்றிக்கொண்டார்கள்.

3. மூன்றாவதாக சென்னை சபையில் தலைப்பில் காணப்படும் மனுஷ ஞானத்தினால் மொழிபெயர்க்கப்பட்ட தவறான மொழிபெயர்ப்புக்குறித்து இந்த செய்தித்தொகுப்பை கொண்டு அவர்களை கடிந்து, கண்டனம்பண்ணி எழுதவேண்டிய நிர்பந்தத்தில் உள்ளேன். ஏனென்றால் பாஸ்டர் வணக்கத்தில் அவர்கள் இருதயம் கடினப்பட்டிருக்கிறது, அன்று பார்வோனின் இருதயத்தை கர்த்தர் கடினப்படுத்தினதுபோல. ஆனால் இது இவர்கள் தங்கள் தவறுகளை திருத்திக்கொள்ளவும், தேவனுடைய சபையில் பாஸ்டர் ஐசக் வசந்தக்குமார் ஊழியத்தைக் குறித்து எச்சரிக்கையாயிருக்கவும் பிரயோஜனமாயிருக்கும் என கிறிஸ்துவுக்குள் நம்பிக்கை கொண்டுள்ளேன். சென்னை சபையில் கர்த்தர் தாறுமாறுகளின் ஆவியை அனுமதித்துள்ளார். அது உண்மை.

4. **சென்னை சபையாரே, முதலில் பாஸ்டர் வணக்கத்தை முற்றிலுமாக உங்கள் நடுவிலிருந்து ஒழித்துக் கட்டுங்கள். இந்தப் பாஸ்டர் வணக்கம் யாரால் சபைக்குள் நுழைந்தது? எப்போதும் கற்றாலும் ஒரு போதும் சத்தியத்தை அறிந்து உணராதவர்களால் தான்! இப்படிப்பட்டவர்கள் தான் சென்னை சபையில் அதிகமதிகம். இவர்களைத்தான் பாஸ்டர் வசப்படுத்திக்கொள்கிறார். உங்கள் சபையில் பாஸ்டர் வணக்கம் காணப்படும்வரை நீங்கள் ஆவிக்குரிய போதனைகளில, வாழ்க்கையில் வளரவே முடியாது. ஒருக்காலும் முடியாது. நீங்கள் மணவாட்டி என்று கூறிக்கொண்டு சாரமற்ற சாந்தை பூசிக்கொண்டுள்ளீர்கள்.**

5. சென்னை சபை பாஸ்டர் ஐசக் வசந்தக்குமார் தனது செய்தி வேளைகளில் அடிக்கடி Blessed be the name of the Lord என்று கூறுவதுண்டு. அதை அவரது மொழிபெயர்ப்பாளர்கள் சகோ.ஜான்சன் ரூபஸ் மற்றும் சகோ.சாமுவேல் போன்றவர்கள் கர்த்தருடைய நாமம் ஆசீர்வதிக்கப்படுவதாக என்று இதுவரை மொழிபெயர்த்துக் கொண்டு கேட்டுக்கேதுவான வேதப்புரட்டை தந்திரமாய் சபைக்குள் நுழையப்பண்ணுகிறதை என் காதுகளால் கேட்டேன். இந்த மொழிபெயர்ப்பு பாஸ்டர் ஐசக் வசந்தக்குமாரின் மனுஷஞானம் போதிக்கிற நயவசன வஞ்சிப்புள்ளதாய் உள்ளது. பாருங்கள் உலகஞானத்தின்படி Blessed be the name of the Lord என்பதற்கு கர்த்தருடைய நாமம் ஆசீர்வதிக்கப்படுவதாக என்பது நூற்றுக்கு நூறு சதவீதம் சரியே. ஆனால் ஆவிக்குரிய

பிரகாரமாக அதை நிதானிக்கும்போது, அது தவறு. நாம் மாம்சத்திற்குரியவர்கள் அல்ல. மாறாக நாம் ஆவிக்குரியவர்கள். இங்கு நான் உங்களுக்கு மனுஷஞானம் போதிக்கிற வார்த்தைகளாலே பேசாமல், எழுதாமல், பரிசுத்த ஆவி போதிக்கிற வார்த்தைகளாலே பேசி, எழுதி ஆவிக்குரியவைகளை ஆவிக்குரியவைகளோடு சம்பந்தப்படுத்திக் காண்பிக்கிறேன். மனுஷருக்கென்று ஊழியம் செய்யாமல், கர்த்தருக்கென்றே நல்மனதோடே ஊழியம் செய்யும் ஒரு உத்தமமும் உண்மையுமான பாஸ்டர் வேதவாக்கியங்கள் என்ன கூறுகிறதோ அதை அப்படியே மாற்றம் எதுவும் இல்லாமல் சபைக்கு கலப்படமற்ற உணவாகக்கொடுப்பார். ஆனால் கள்ள கபடமுள்ள வேலையாட்கள் வேதவாக்கியங்களுடன் ஒன்றை கூட்டுவார்கள் அல்லது ஒன்றை குறைப்பார்கள். இதிலிருந்து நாம் அவர்களை அடையாளம் கண்டுகொள்ளலாம். இதுவரை அடையாளம் கண்டுக்கொள்ளவில்லையா? அப்படியானால் கர்த்தர் உங்களுக்குப் பிரகாசமுள்ள மனக்கண்களைக்கொடுக்க வேண்டிக்கொள்ளுங்கள். நானும் உங்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறேன்.

6. Blessed be the name of the Lord என்பது **கர்த்தருடைய நாமத்திற்கு ஸ்தோத்திரம்** என்று வேத வாக்கியங்களில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளதை யோபு 1:21-ல் காண்கிறோம். ஆனால் இதை பாஸ்டர் ஐசக் வசந்தக்குமார் **கர்த்தருடைய நாமம் ஆசீர்வதிக்கப்படுவதாக** என்று மொழிபெயர்க்கிறார். இது தவறு என்று அவருடைய மொழிபெயர்ப்பாளர் சகோ.ஜான்சன் ரூபஸ்க்கும், பாஸ்டருக்கும் கடிதம் எழுதினேன். நேரில் வாய்மொழியாகப் பேசினேன். ஆனாலும் அவர்கள் தங்கள் மொழிபெயர்ப்பு சரிதான் என்பதில் உறுதியாக இருக்கின்றார்கள். மத் 6:9 **பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக** என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளதே என்பதை சுட்டிக்காட்டி தங்களைத்தாங்களே மெச்சிக்கொண்டார்கள். தவறை திருத்துவதற்குரிய மனச்சுபாவம் அவர்களிடம் காணப்படவில்லை. ஆதலால் இவர்களது மொழிபெயர்ப்பு குறித்து நாம் இங்கு தியானிப்போம். சத்திய ஆவியானவர் நம்மை சகல சத்தியத்திற்குள்ளும் வழிநடத்திச் செல்லுவார். அது நிச்சயம். முதலாவது நீங்கள் அறிந்து கொள்ளவேண்டியது: நான் ஆராதிக்கும் தேவன் வல்லமையையும், ஐசுவரியத்தையும், ஞானத்தையும், பெலத்தையும், கனத்தையும், மகிமையையும், ஸ்தோத்திரத்தையும் பெற்றுக்கொள்ள பாத்திரராயிருக்கிறார். வெளி.5:12, 13; 7:12. மாறாக ஆசீர்வாதத்தை அவர் பெற்றுக்கொள்ள பாத்திரராயிருக்கிறார் என்று வேதவாக்கியங்களில் எங்கும் ஆதாரங்கள் கிடையாது. மாறாக அதற்கு சென்னை சபையில் மட்டுமே ஆதாரம் காணப்படுகிறது.

**7.** இந்த மொழிபெயர்ப்பு தேவனுடைய சபையில் ஒரு உபதேசமாக இருப்பதால், கிறிஸ்துவின் சரீரமாகிய சபை பக்திவிருத்தியடைய சுவிசேஷகனாக கர்த்தரால் ஏற்படுத்தப்பட்டவனாகிய நான் இதில் தலையிடவேண்டியவனாயிருக்கிறேன். ஆதலால் என்னிலுள்ள கிறிஸ்துவினுடைய சத்தியத்தைக் கொண்டும், வேதவாக்கியங்களைக் கொண்டும் இந்த செய்தித்தொகுப்பை உங்கள் பக்திவிருத்திக்காக எழுதுகிறேன். சென்னை சபையாரே, நான் இந்த செய்தித்தொகுப்பை எழுதுவது உங்களை சிநேகியாதபடியினால் அல்ல. மாறாக நான் உங்களை அதிகமாக நேசிக்கிறபடியினாலே. இதை தேவன் அறிவார். ஆதலால் எனக்கு பிரியமான சென்னை சபையாரே, பாஸ்டர் ஐசக் வசந்தக்குமார் அவர்களே, நான் உங்களுடைய சபைக்கடுத்த காரியங்களில் தலையிடுவதாக நினைத்துக்கொள்ளக்கூடாது. மாறாக இது தேவனுடைய சபைக்கடுத்த காரியம் என நினைத்துக்கொள்ளுங்கள்.

8. தமிழ் இலக்கணத்தின்படி Bless என்ற ஆங்கிலச்சொல் ஒரு வினைச்சொல் ஆகும். ஏனென்றால் இது ஒரு செயலைக் குறிக்கிறது. இதற்கு ஆசீர்வதி, வாழ்த்து, புனிதமாக்கு, பரிசுத்தமாக்கு, மகிழ்ச்சியடையச்செய் போன்ற அர்த்தங்கள் உண்டு. இவைகள் யாவும் வெவ்வேறு செயலை சுட்டிக்காட்டுவதாக உள்ளது. உதாரணமாக கர்த்தர் ஆசீர்வதித்தார், யோபு ஸ்தோத்தரித்தான். இதில் ஆசீர்வதித்தார், ஸ்தோத்தரித்தான் என்பது வெவ்வேறு செயலை சுட்டிக்காட்டும் வினைச்சொல் ஆகும். இவைகள் கர்த்தர், யோபு ஆகியோரின் செயலை குறிக்கிறது. ஆக ஒன்றன் தொழிலை உணர்த்தி, அதன் காலத்தை காட்டி நிற்கும் சொல் வினைச்சொல் ஆகும்.

9. Blessed என்ற ஆங்கில வினைச்சொல் எவ்வாறு காலங்களைச் சுட்டிக்காட்டுகின்றன என்பதையும் இங்கு கவனிப்போம். நான் இலக்கணத்தில் அறிவு படைத்தவன் அல்ல.

| | | | | |
|---|---|---|---|---|
| அ) | Bless | = ஆசீர்வதி | - நிகழ்காலம் | - Present Tense |
| ஆ) | Blessed | = ஆசீர்வதித்தார் | - கடந்தகாலம் | - Past Tense |
| இ) | Will Bless | = ஆசீர்வதிப்பார் | - வருங்காலம் | - Future Tense |
| ஈ) | Has Blessed | = ஆசீர்வதித்திருக்கிறார் | - கடந்தகால எச்சவினை | - Past Participle |

10. வேதாகமத்தில் எபிரேய மற்றும் கிரேக்க பாஷையிலிருந்து Blessed என்று ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தைக்கு அநேக அர்த்தங்கள் உண்டென்பதை நான் முந்திய பத்தியில் தெளிவுபடுத்தியுள்ளேன். Blessed is found in both the testaments having varying translations of the same Hebrew or Greek word. இதில் முக்கியமானது ஆசீர்வதி, ஸ்தோத்திரம், பாக்கியவான் ஆகும். இதற்கு இங்கு உதாரணங்களை வேதவாக்கியங்களிலிருந்து காண்போம்.

11. வேதவாக்கியங்களிலிருந்து மனுஷன் ஆசீர்வதிப்பவனாகவும், ஆசீர்வதிக்கப்பட்டவனாகவும் காணப்படும் சம்பவங்களில் Blessed என்ற ஆங்கில வினைச்சொல் உபயோகிக்கப்பட்டிருப்பதற்கு சில உதாரணங்களை காண்போம். அதாவது Man is both agent and object. தேவஆசீர்வாதம் மனுஷரால் மொழிபட்டாலும், அது தேவனிடத்திலிருந்து வருவதாகும். ஏனென்றால் ஆசீர்வதிக்கிறவனுக்கு தேவனோடு நெருங்கிய உறவு உண்டு.

அ) யாக்கோபு தன் தகப்பனாகிய ஈசாக்கண்டையில் கிட்டப்போனான்; .. அவனுடைய கைகள் அவன் சகோதரனாகிய ஏசாவின் கைகளைப்போல் ரோமமுள்ளவைகளாகயிருந்தபடியினாலே, இன்னான் என்று அறியாமல், ஈசாக், யாக்கோபுவை **ஆசீர்வதித்தான்.** ஆதி 27:23. And Jacob went near unto Isaac; .. and Isaac recognised him not, because his hands were hairy, as his brother Easu's hands; so he **blessed** him. இங்கு தகப்பன் மகனை ஆசீர்வதித்த இடத்தில் Blessed என்ற வினைச்சொல் உபயோகிக்கப்பட்டுள்ளது. Blessed = ஆசீர்வதித்தான். (ஆசீர்வதி)

ஆ) இரண்டாவதாக ஏலி, எல்க்கானாவையும், அவன் மனைவியையும் **ஆசீர்வதித்தான்.** 1சாமு.2:20. And Eli **blessed** Elkanah and his wife. இங்கு தீர்க்கதரிசியாகிய சாமுவேலின் பெற்றோரை ஆசாரியனாகிய ஏலி ஆசீர்வதித்ததை காண்கிறோம். இங்கு **ஆசீர்வதித்தான்** என்ற வினைச்சொல்லுக்கு **Blessed** என்ற ஆங்கில சொல் உள்ளது. (ஆசீர்வதி)

இ) மூன்றாவதாக சாலொமோன் ராஜா முகம் திரும்பி, இஸ்ரவேல் சபையை எல்லாம் **ஆசீர்வதித்தான்.** 1இரா. 8:14 The King Solomon turned his face about and **blessed** all the congregation of Israel. இங்கு சாலொமோன் ராஜா இஸ்ரவேல் ஜனங்களை ஆசீர்வதித்ததைக் காண்கிறோம். இங்கும் **ஆசீர்வதித்தான்** என்ற வினைச்சொல்லுக்கு ஆங்கிலத்தில் **blessed** என்ற வார்த்தையே உள்ளது. (ஆசீர்வதி)

12. இந்த மூன்று உதாரணங்களைப் போன்று வேதவாக்கியங்களில் அநேக உதாரணங்கள் உண்டு. எந்த ஒரு காரியத்திற்கும் இரண்டு மூன்று சாட்சிகள் வேண்டும் என்பதற்காக இங்கு மூன்று உதாரணங்களை மட்டும் கொடுத்துள்ளேன். இங்கு மனுஷன் ஆசீர்வதிக்கப்பட்டவனாகவும், ஆசீர்வதிப்பவனாகவும் இருக்கிறான். அதாவது Man both agent and object. இங்கு **ஆசீர்வதித்தான்** என்பதற்கு **blessed** என்ற ஆங்கில வார்த்தை ஆவியானவரால் அனுமதிக்கப்பட்டுள்ளது.

13. இரண்டாவதாக தேவன், மனுஷனை ஆசீர்வதிக்கும் இடங்களிலும் **blessed** என்ற வார்த்தையே வேதவாக்கியங்களில் காணப்படுகிறது. தேவன் மனுஷனை ஆசீர்வதிக்கிறார். மனுஷன் ஆசீர்வாதத்தை தேவனிடமிருந்து பெறுகிறான். இங்கு God the agent and man the object. இதற்கும் சாட்சியாக சில உதாரணங்களை காண்போம்.

அ) ஆபிரகாம் மரித்த பின் தேவன் அவன் குமாரனாகிய ஈசாக்கை **ஆசீர்வதித்தார்.** ஆதி 25:11. And it came to pass after the death of Abraham, that God **blessed** his son Isaac. இங்கும் தேவன் **ஆசீர்வதித்தார்** என்ற இடத்தில் **blessed** என்ற வார்த்தையே உள்ளது. (ஆசீர்வதி)

ஆ) பின்பு அந்த ஸ்திரீ ஒரு குமாரனைப் பெற்று அவனுக்கு சிம்சோன் என்று பேரிட்டாள்; அந்த பிள்ளை வளர்ந்தது; கர்த்தர் அவனை **ஆசீர்வதித்தார்.** நியாயாதி 13:24. And the woman bore a son and called his name Samson; and the child grew; and the Lord **blessed** him. (ஆசீர்வதி)

இ) கர்த்தர் யோபுவின் முன் நிலைமையைப் பார்க்கிலும், அவன் பின் நிலைமையை **ஆசீர்வதித்தார்.** யோபு 42:12. So, the Lord **blessed** the later end of Job more than his beginning. (ஆசீர்வதி)

14. இந்த மூன்று எடுத்துக்காட்டுகளிலும் தேவன் மனுஷனை ஆசீர்வதிக்கும் இடங்களில் **blessed** என்ற ஆங்கில வினைச்சொல்லே உள்ளது என்பதைக் கண்டோம். ஆக, மனுஷன் மனுஷனை ஆசீர்வதிக்கும் இடங்களிலும் வேதவாக்கியங்களில் **blessed** என்ற வினைச்சொல் உள்ளது. அடுத்து தேவன் மனுஷனை ஆசீர்வதிக்கும் இடங்களிலும் **blessed** என்ற வினைச்சொல்லே உள்ளது என்பதை வேதவாக்கியங்களின் அடிப்படையில் கண்டோம்.

15. இனி இந்த வினைச்சொல் **blessed**க்கு வித்தியாசமான மொழிபெயர்ப்புகளை காண்போம். மூன்றாவதாக இங்கு மனுஷன், தேவன் தன் மேல் பாராட்டின அன்புக்காகவும், இரக்கத்திற்காகவும், கிருபைக்காகவும், உதவிக்காகவும் நன்றி செலுத்தும்போது அவரை ஸ்தோத்திரிக்கிறான். அதாவது தேவனுடைய ஆசீர்வாதத்தைப் பெறுபவன் அவருக்கு தன் நன்றியை தெரிவிக்கும் வகையில் அவரை துதிக்கிறான், ஸ்தோத்திரிக்கிறான். தமிழில் **ஸ்தோத்திரம்** என்ற வினைச்சொல்லுக்கும் ஆங்கிலத்திலுள்ள **blessed** என்ற வினைச்சொல்லே வேத வாக்கியங்களில் பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு, எழுதப்பட்டுள்ளது. இங்கு மனிதன் ஸ்தோத்திரிப்பவன். தேவன் ஸ்தோத்திரத்துக்குரியவர். இங்கு மனுஷன் agent ஆகவும், தேவன் object ஆகவும் காணப்படுகிறார்கள். **மனுஷன் தேவனை துதிக்கலாம், ஸ்தோத்திரிக்கலாம். ஆனால் ஆசீர்வதிக்கமுடியாது.** முன்பு **ஆசீர்வதித்தார்** என்ற வினைச்சொல்லுக்கு உபயோகிக்கப்பட்ட அதே **blessed** என்ற ஆங்கில வினைச்சொல்லே இங்கு **ஸ்தோத்திரி, ஸ்தோத்திரித்தார்கள்** என்ற வினைச்சொல்லுக்கும் உபயோகிக்கப்பட்டுள்ளது. இங்கு தேவனை ஸ்தோத்திரித்ததற்கு **blessed** என்ற வினைச்சொல் உபயோகத்தில் உள்ளதற்கு சில எடுத்துக்காட்டுகளை காண்போம்.

அ) அதன் பின்பு தாவீது சபை அனைத்தையும் நோக்கி: இப்பொழுது உங்கள் தேவனாகிய கர்த்தரை **ஸ்தோத்திரியுங்கள்** என்றான். அப்பொழுது சபையார் எல்லாரும் தங்கள் பிதாவாகிய தேவனை **ஸ்தோத்திரித்தார்கள்.** 1நாளா.29:20 And David said to all the congregation, Now **bless** the Lord your God. And all the congregation **blessed** the Lord God of their fathers. (ஸ்தோத்திரம்)

ஆ) தானியேல் பரலோகத்தின் தேவனை **ஸ்தோத்திரித்தான்.** தானி.2:19. Then Daniel blessed the God of heaven. (ஸ்தோத்திரம்)

இ) இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் அநாதியாய் என்றென்றைக்கும் **ஸ்தோத்திரிக்கப்படத்தக்கவர்.** சங்.106:48. Blessed be the Lord God of heaven from everlasting to everlasting. (ஸ்தோத்திரம்)

ஈ) அவர் என்றென்றைக்கும் **ஸ்தோத்திரிக்கப்பட்ட** சர்வத்திற்கும் மேலான தேவன். ரோ.9:5. Who is over all, God **blessed** for ever. (ஸ்தோத்திரம்)

உ) கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு **ஸ்தோத்திரம்.** எபே.1:3. **Blessed** be the God and Father of our Lord Jesus Christ. (ஸ்தோத்திரம்)

16. இங்கு மேற்கண்ட உதாரணங்களை கவனித்தீர்களானால் மனுஷன் தேவனை ஸ்தோத்திரிக்கும் இடங்களில் **ஸ்தோத்திரித்தான்** என்ற வினைச்சொல்லுக்கும் **blessed** என்ற வினைச்சொல்லே உள்ளது. சென்னை சபை பாஸ்டர் ஐசக் வசந்தக்குமார் மற்றும் அவரது மொழிபெயர்ப்பாளர்களின் புத்திக்கூர்மையின்படி;

அ) தாவீது சபை அனைத்தையும் நோக்கி: இப்பொழுது உங்கள் தேவனாகிய கர்த்தரை **ஆசீர்வதியுங்கள்** என்று கூறியிருக்கவேண்டும். அப்பொழுது சபையார் எல்லாரும் தங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தரை **ஆசீர்வதித்தார்கள்** என இருக்க வேண்டும். பாஸ்டர் ஐசக் வசந்தக்குமார் தன் நிலையை சற்று சீர்தூக்கி பார்ப்பாரா? மனுஷன் தேவனை ஆசீர்வதிக்க முடியுமா? அல்லது அவருக்கு ஆசீர்வாதம் தான் கூறமுடியுமா?

ஆ) அடுத்து பாஸ்டர் ஐசக் வசந்தக்குமாரின் பகுத்தறிவின்படி தானியேல் பரலோகத்தின் தேவனை **ஆசீர்வதித்தான்** என்று இருக்கவேண்டும். இது எவ்வளவு பெரிய அபத்தம்! நிச்சயமாக பாஸ்டர் ஐசக் வசந்தக்குமார் ஒரு முரண்பாட்டின் விதை தான்.

இ) இங்கு பாஸ்டர் ஐசக் வசந்தக்குமாரை ஆட்கொண்டிருக்கும் ஆவியின்படி இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் அநாதியாய் என்றென்றைக்கும் **ஆசீர்வதிக்கப்படத்தக்கவர்** என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்க வேண்டும். இப்படி ஒரு மொழிபெயர்ப்பு இருக்குமானால் அது பிசாசாகத்தான் இருக்கவேண்டும்.

ஈ) இங்குள்ள எடுத்துக்காட்டு, பாஸ்டர் ஐசக் வசந்தக்குமாரின் ஞானத்தின்படி அவர் என்றென்றைக்கும் **ஆசீர்வதிக்கப்பட்ட** சர்வத்திற்கும் மேலான தேவன் என்று இருக்கவேண்டும். என்னைப் பொறுத்தளவில் பரிசுத்த வேதாகமம் இனி புதிதாக மொழிபெயர்ப்பு செய்யப்படவேண்டும். அதற்கு பாஸ்டர் ஐசக் வசந்தக்குமார் தலைமை தாங்கவேண்டும். சென்னை சபை முரண்பாட்டின் வித்து தான். ஏனென்றால் வேதவாக்கியங்களுக்கு எதிரான முரண்பாடுகள் யாவும் இங்கிருந்து தான் உற்பத்தியாகிறது.

உ) இந்த எடுத்துக்காட்டின்படி, இதற்கு புதிய மொழிபெயர்ப்பு கொடுக்கப்பட்டு கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு **ஆசீர்வாதமுண்டாவதாக** என்று திருத்தப்படவேண்டும். **Blessed** என்ற வினைச்சொல்லுக்கு **ஆசீர்வதிக்கப்படுவதாக** என்ற பாஸ்டர் ஐசக் வசந்தக்குமாரின் தமிழ் மொழிபெயர்ப்பு, அவருடைய மதிகேடு வெளிப்படுதலாகும்.

17. நான்காவதாக மனுஷன் தேவனுடைய நாமத்தை கூறி அவரை ஸ்தோத்திரிக்கிறான். இங்கும் **ஸ்தோத்திரித்தான்** என்பதற்கு ஆங்கில **blessed** என்ற வினைச்சொல்லே உள்ளது. இங்கு மனிதன் ஸ்தோத்திரிப்பவன். தேவனுடைய நாமம் ஸ்தோத்திரத்திற்குரியது. கர்த்தருடைய நாமம் என்று கூறும்போது அது அவருடைய தெய்வீகத்தை, மகிமையை, மகத்துவத்தை, அதிகாரத்தை, தன்மையை, திருவுளத்தை, எண்ணத்தை, சிந்தனைகளை குறிக்கின்றதாயிருக்கிறது. இங்கு உதாரணத்திற்கு ஒரு எடுத்துக்காட்டை கவனியுங்கள். அவருடைய தெய்வீகத்தையும், தன்மையையும் நாம் கவனித்தால் அவர்:

அ) நித்தியானந்தமுள்ள ஏக சக்கராதிபதி.
ஆ) இராஜாதி இராஜா
இ) கர்த்தாதி கர்த்தா
ஈ) அவர் ஒருவர் (மூவர் அல்ல)
உ) சாவாமையுள்ளவர்
ஊ) சேரக்கூடாத ஒளியில் வாசம் பண்ணுகிறவர்
எ) மனுஷரில் ஒருவரும் கண்டிராதவர்
ஏ) மனுஷரில் ஒருவரும் காணக்கூடாதவர்

இதை நீங்கள் 1தீமோ.6:15,16 வசனங்களில் காணலாம். மேலும், எங்கள் ஆண்டவராகிய கர்த்தாவே, உம்முடைய நாமம் எவ்வளவு மேன்மையுள்ளதாயிருக்கிறது. சங்.8:1 இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும், பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசு கிறிஸ்து கர்த்தர் என்று நாவுகள் யாவும் அறிக்கைபண்ணும்படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார். பிலி.2:10,11. இந்த நாமத்தை குறித்து உம்முடைய நாமம் ஆசீர்வதிக்கப்படுவதாக என்று ஒருவன் கூறலாமா? ஒரு சிருஷ்டி தன் சிருஷ்டிகர்த்தாவை ஆசீர்வதிக்கலாமா? சிருஷ்டிக்கப்பட்டவன் சிருஷ்டித்தவருடைய நாமத்திற்கு ஆசீர்வாதம் கூறலாமா? அப்படி ஆசீர்வதிக்க, ஆசீர்வாதம் கூற உங்கள் பாஸ்டர் வேதவாக்கியங்களில் கற்பிக்கப்பட்டிருக்கிறாரா? உங்கள் பாஸ்டரின் மொழிபெயர்ப்புகள் அப்பிரயோஜனமும், வீணுமாயிருக்கிறது. அவைகள் மாயையும், மனதுக்கு சஞ்சலமுமாயிருக்கிறது.

18. நான்காவது எடுத்துக்காட்டு, அதாவது கர்த்தருடைய நாமத்தை ஸ்தோத்திரிக்கும்போதும் அங்கு **blessed** என்ற வார்த்தையே ஸ்தோத்திரம் என்ற அர்த்தத்தோடு மொழிபெயர்க்கப்பட்டுள்ளதை காண்போம்.

அ) நீங்கள் எழுந்திருந்து, அநாதியாய் என்றென்றைக்குமிருக்கிற உங்கள் தேவனாகிய கர்த்தரை **ஸ்தோத்திரியுங்கள்** என்று சொல்லி கர்த்தரை நோக்கி; எந்த துதி ஸ்தோத்திரத்திற்கும் மேலான உம்முடைய மகிமையுள்ள நாமத்திற்கு **ஸ்தோத்திரமுண்டாவதாக** என்று லேவியர் ஜனங்களை நோக்கியும், கர்த்தரை நோக்கியும் கூறியதை இங்கு காண்கிறோம். நெகே.9:5. Standup and bless the Lord, your God, forever and ever; and blessed be the glorious name, which is exalted above all blessings and praises. இங்கு ஜனங்கள் தேவனுடைய நாமத்தை ஸ்தோத்திரித்தபோது கூட bless, blessed என்ற ஆங்கில வினைச்சொல் காணப்படுகிறது. இங்கு பாஸ்டர் ஐசக் வசந்தக்குமார் போதனையின்படி **நீங்கள் எழுந்திருந்து உங்கள் தேவனாகிய கர்த்தரை ஆசீர்வதியுங்கள்** என்று இருக்கவேண்டும். சென்னை சபையில் எங்கும் தேவதூஷனம் தானா?

திருமண முத்தத்தில் தேவதூஷனம்

கர்த்தருடைய இராப்போஜனத்தில் தேவதூஷனம்

தேவனை துதித்துப்பாடுவதிலும் தேவதூஷனம். 14.3.2004 அன்று நான் சென்னை சபைக்கு ஞாயிறு ஆராதனைக்கு சென்றிருந்தேன். அன்று Mount Zion Literature Services, 431/136. T.H.Road, Tondiarpet, Chennai-600 081 வெளியிட்டுள்ள பாட்டு புத்தகத்திலிருந்து 272வது பாடலை பாடினார்கள். அதில் **ஆபிரகாமின் தேவன் ஈசாக்கின் தேவன் யாக்கோபின் தேவன் அவர், என்னை அழைத்தும் உன்னத வழியில் என்றென்றைக்கும் நடத்திடுவார்** என்ற கவியை மாற்றி **யாக்கோபின் தேவன் அவர்** என்ற இடத்தில் **பிரன்காமின் தேவன் அவர்** என்று பாடினார்கள். அவர்கள் கைகளை உயர்த்தி, அசைத்துப் பரவசமுடன் பாடினார்கள். நானோ என் கரங்களை முடக்கிக்கொண்டு, மனமகிழ்ச்சியற்ற நிலையிலிருந்தேன். ஏனென்றால் தேவனுடைய நாமத்தை அவர்கள் தங்களுடைய பாடலில் தூஷிப்பதை என் காதுகளால் கேட்டுக்கொண்டு எதுவும் செய்யமுடியாத சூழ்நிலையிலிருந்துக்கொண்டிருந்தேன். சென்னை சபையாரால் தேவனுடைய நாமம் அசட்டை பண்ணப்படுவதை என் கண்களால் கண்டேன். அன்று முதல் இவர்கள் ஆவியை குறித்து நிதானித்துக்கொண்டே வந்தேன். முடிவாக பாஸ்டரை பிரன்காம் கிறிஸ்து ஆவி மறைமுகமாக ஆட்டிப் படைக்கிறது என்பதை கண்டு கொண்டேன். இதை சபையார் புரிந்து கொள்ள முடியவில்லை. அவர்கள் வஞ்சிக்கப்படுகிறார்கள். தேவன் கொடிய வஞ்சகத்தை சென்னை சபைக்குள் அனுப்பியுள்ளதை அறிந்து கொண்டேன். வஞ்சிக்கிற ஆவி அங்கு கிரியை செய்கிறது என்பதை உணர்ந்துகொண்டேன். ஆதலால் நான் எவ்வளவு தான் சத்தியத்தை கூறினாலும்

அவர்கள் அதை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். தேவனுடைய வித்து அங்கு காணப்படுமானால் அது நிச்சயமாக இந்த செய்திதொகுப்பை ஏற்றுக்கொள்ளும்.

தேவனை ஸ்தோத்திரிப்பதிலும் தேவதூஷனம்

தான் ஒரு பரிசுத்தமில்லாத, பெலவீனமுள்ள புருஷனாயிருந்தும் தேவனுடைய சபைக்கு ஆவிக்குரிய புருஷன் என்று பாஸ்டர் ஐசக் வசந்தக்குமார் தன்னை உயர்த்துவது எல்லாவற்றிலும் மாபெரிய தேவதூஷனம். ஆம், சென்னை சபை தேவதூஷனத்தின் பிறப்பிடமாக, ஊற்றாக காணப்படுகிறது. எனக்கு பிரியமான சென்னை சபையாரே நீங்கள் இனி குழந்தைகளாயிராமல், உங்கள் பாஸ்டருடைய சூதும், வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுள்ள மேற்கூறிய போதனைகளாலும் பலவிதமான காற்றிலே அலைகள் போல அடிப்பட்டு அலைகிறவர்களாயிராமல் பாஸ்டரின் வீணான சிந்தையிலே, தன் புத்தியில் அந்தக்காரப்பட்டு தன் இருதயத்தின் கடினத்தில் நடக்கிறது போல நீங்களும் நடவாமல் அன்புடன் சத்தியத்தை கைக்கொண்டு தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலும் வளர்கிறவர்களாயிருங்கள். நீங்கள் மனந்திரும்பும்படியாய் கர்த்தர் உங்களுக்கு தவணை கொடுக்கிறார். காலத்தை பிரயோஜனப்படுத்திக்கொள்ளுங்கள்.

ஆ) யோபுவை பாருங்கள் அவன் கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார்; கர்த்தருடைய நாமத்துக்கு ஸ்தோத்திரம் என்றான். யோபு 1:21. The Lord gave, and the Lord hath taken away; **blessed** the name of the Lord. இங்கு யோபு தன் சிறுமையிலும் கர்த்தருக்கு நன்றியுள்ளவனாயிருந்து, அவரை ஸ்தோத்திரிக்கிறான். ஆனால் இதை **கர்த்தருடைய நாமம் ஆசீர்வதிக்கப்படுவதாக** என்று மொழிபெயர்க்கும் பாஸ்டர் ஐசக் வசந்தக்குமாருக்குள் உலகத்தின் ஆவி குடிக்கொண்டிருக்கிறதேயன்றி மற்றப்படி அல்ல. தேவனுடைய ஆவியேயன்றி ஒருவனும் தேவனுக்குரியவைகளை அறியமாட்டான். ஜென்மசுபாவ மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக்கொள்ளான். அவைகள் ஆவிக்கேற்றபிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப் படுகிறவைகளாயிருப்பதால், அவைகளை அறியவுமாட்டான். பாஸ்டர் ஐசக் வசந்தக்குமார் அறியவுமாட்டார்.

இ) தானியேல் தேவனுடைய நாமத்திற்கு என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் ஸ்தோத்திரம் உண்டாவதாக என்றான். தானி.2:20. Daniel answered and said, **blessed** be the name of the God for ever and ever. பாஸ்டர் ஐசக் வசந்தக்குமார் இனி **தேவனுடைய நாமத்திற்கு என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் ஆசீர்வாதமுண்டாவதாக** என்று மொழிபெயர்த்து ஒரு சாத்தானின் வேதாகமம் ஒன்றை உருவாக்க முயற்சி செய்துகொண்டிருக்கிறார் என நான் நினைக்கிறேன்.

19. ஆக சென்னை சபையாரும் அவர்களது பாஸ்டரும் இனி ஒரு பழைய ஏற்பாடும் புதிய ஏற்பாடும் அடங்கிய சாத்தானின் வேதாகமம் ஒன்றை தமிழ் மொழியில் புதிய மொழிபெயர்ப்புடன் உருவாக்கிவிடுவார்கள் என தோன்றுகிறது. இவர்களின் இருதயம் இவர்கள் செல்வத்தினால், உலகஞானத்தினால் மேட்டிமை ஆயிற்று. தங்கள் இருதயத்தை சாத்தானின் இருதயம் போல் ஆக்கினார்கள்.

20. மேற்கூறிய உதாரணங்களிலிருந்து ஜனங்கள் தேவனை ஸ்தோத்திரிக்கும்போதும், தேவனுடைய நாமத்தை ஸ்தோத்திரிக்கும் போதும் **blessed** என்ற ஆங்கில வினைச்சொல்லே காண்ப்பட்டதைப் பார்க்கிறோம். நாம் கர்த்தருடைய நாமத்தை ஸ்தோத்திரிக்கலாம். **ஆனால் கர்த்தருடைய நாமத்தை ஆசீர்வதிக்க முடியாது, கர்த்தருடைய நாமத்திற்கு ஆசீர்வாதம் உண்டாவதாக என ஆசீர்வாதம் கூறவும் முடியாது. அப்படி கூறுவது முரண்பாட்டின விதை.**

21 கர்த்தர் தம்முடைய பரிசுத்தவான்களை கொண்டு எபே.1:3ஐ எவ்வளவு ஞானமாக மொழிபெயர்த்துள்ளார். என்பதை கவனியுங்கள். நம்முடைய பிதாவாகிய தேவனுக்கு **ஸ்தோத்திரம்**. அவர் கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்களினாலும் நம்மை **ஆசீர்வதித்திருக்கிறார்**. **Blessed** be the God and Father of our Lord Jesus Christ, who has **blessed** us with all spiritual blessings in heavenly places in Christ Jesus.

22. பாருங்கள், இங்கு ஆங்கிலத்தில் **blessed** என்று இரு இடத்தில் காணப்படுகிறது. முதல் **blessed** என்பதற்கு **ஸ்தோத்திரம்** என்றும், இரண்டாவது **has blessed us** என்பதற்கு **ஆசீர்வதித்திருக்கிறார்** என்றும் ஞானமாய் மொழிபெயர்ப்பாளர்கள் மொழிபெயர்த்திருக்கிறார்கள். ஒரே வினைச்சொல்லுக்கு ஒரே வாக்கியத்தில் இருவிதமான அர்த்தத்தில் மொழிபெயர்த்துள்ளார்கள். இது தெய்வீக ஞானம். இந்த ஞானமல்லாமல் வேதாகமத்தை அவர்கள் மொழிபெயர்த்திருக்க முடியாது.

23. பாஸ்டர் ஐசக் வசந்தக்குமாரின் ஜென்மசுபாவ ஞானத்தின்படி இது மொழிபெயர்க்கபபட்டிருக்குமானால், அது கீழ்க்கண்டவாறு இருக்கவேண்டும். நம்முடைய **கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவன் ஆசீர்வதிக்கப்படுவாராக.** அவர் கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்களினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார். அப்படியானால் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவன் ஆசீர்வதிக்கப்படுவாராக என்பது எவ்வளவு பெரிய ஒரு தேவதூஷனமாகும்? பரிசுத்த ஆவிக்கு விரோதமான தூஷனமாகும்? நான் எழுதுவது சென்னை சபையாரே உங்களுக்கு புரிகிறதா? வேதவாக்கியங்களை அறிந்துகொள்ளும்படி உங்களுடைய மனதை கர்த்தர் திறக்காவிட்டால் நிச்சயமாக நீங்கள் வேதவாக்கியங்களை அறிந்துகொள்ள, புரிந்துகொள்ள முடியாது. பரிசுத்த வேதாகமம் பள்ளிக்கூட ஒரு பாடபுஸ்தகம் அல்ல. இது தேவஆவியினால் அருளப்பட்டிருப்பதினால், தேவஆவியினாலே அதை அறிந்து கொள்ளமுடியும்.

24. புத்தியில்லாத சென்னை சபையாரே நீங்கள் சத்தியத்திற்கு கீழ்ப்படியாமற் போகத்தக்கதாக உங்களை மயக்கினவன் யார்? உங்கள் பாடுகளும், பிரயாசங்களும், விசுவாசமும் வீணாய் போயிற்றே. மேலும் **என் ஆத்துமாவே கர்த்தரை ஸ்தோத்திரி** என சங்.103:1,2-ல் வாசிக்கிறோம். அது ஆங்கிலத்தில் Bless the Lord, O my Soul என உள்ளது. ஆனால் இது **என் ஆத்துமாவே கர்த்தரை ஆசீர்வதி** என உங்கள் பாஸ்டரின் ஞானத்தின்படி இருக்கவேண்டும். அப்படியானால் இது எவ்வளவு பெரிய ஒரு அபத்தமான மொழிபெயர்ப்பு. பிரியமானவர்களே, வேதவாக்கியங்கலெல்லாம் தேவஆவியினால் அருளப்பட்டிருக்கிறது. ஆதலால் பரிசுத்த ஆவியின் வழிநடத்துதலுக்கு உங்களை ஒப்புக்கொடுங்கள். பாஸ்டரின் மரண வழிநடத்துதலுக்கு உங்களை ஒப்புக்கொடுக்காதீர்கள்.

25. மேற்கண்ட அனைத்து எடுத்துக்காட்டுகளிலிருந்து நாம் கற்றுக்கொண்டது என்ன?

அ) ஒரு மனுஷன் மற்றொரு மனுஷனை அல்லது ஒரு கூட்டம் மக்களை ஆசீர்வதிக்கும்போது அங்கு blessed – ஆசீர்வதித்தான் என்ற அர்த்தம் கொள்ளும் வினைச்சொல்லுள்ளது.

ஆ) தேவன் ஒரு மனுஷனை ஆசீர்வதிக்கும்போதும் அங்கு blessed – ஆசீர்வதித்தார் என்ற வினைச் சொல்லே உள்ளது.

இ) அதோடு மட்டுமல்ல, தேவனுக்கு, தேவனுடைய நாமத்துக்கு ஜனங்கள் மகிமையையும், கனத்தையும், ஸ்தோத்திரத்தையும் செலுத்தும்போது அங்கு blessed - ஸ்தோத்திரி என்ற அர்த்தத்தில்தான் வினைச்சொல் உள்ளது. பாஸ்டர் ஐசக் வசந்தக்குமார் உபதேசத்தின்படி அங்கு blessed – ஆசீர்வதித்தான் என்ற அர்த்தத்தில் இல்லை என்பதை கண்டறிந்தோம். ஆக பாஸ்டரது உபதேசம் ஒரு மாறுபாடானது ஆகும்.

ஈ) தேவனுக்கடுத்த, தேவனுடைய நாமத்திற்கடுத்த இடங்களில் bless என்ற ஆங்கில வினைச்சொல் ஆசீர்வதி, ஆசீர்வதிக்கப்படுவதாக என்று வேதவாக்கியங்களில் எங்கும் இல்லை. இது சென்னை சபையில் மட்டும் காணப்படும் ஒரு புதிய மொழிபெயர்ப்பு ஆகும். மாறாக blessed என்ற ஆங்கில வினைச்சொல் ஸ்தோத்திரி, ஸ்தோத்திரமுண்டாவதாக என்றே உள்ளது. நாம் ஆராதிக்கும் தேவன் நம்முடைய துதிகளுக்கும், ஸ்தோத்திரங்களுக்கும் உட்பட்டவர். அவர் நம்முடைய ஆசீர்வாதங்களுக்குட்பட்டவரல்ல. ஆனால் சென்னை சபையார் ஆராதிக்கும் தேவன் அவர்களுடைய ஆசீர்வாதங்களுக்குட்பட்டவர். ஆனால் அவர்களின் துதி ஸ்தோத்திரங்களுக்குட்பட்டவரல்ல. நாம் அவர்களின் தேவனை ஆராதிக்கவேண்டாம்.

26. ஆக தேவனுக்கடுத்த, தேவனுடைய நாமத்திற்கடுத்த இடங்களில் ஆசீர்வதி, ஆசீர்வதிக்கப்படுவதாக என்பது பரத்திலிருந்து இறங்கிவராத லௌகிக ஞானம். சென்னை சபையார் தங்கள் வீம்புகளில் மேன்மைபாராட்டுகிறார்கள். அப்படிப்பட்ட மேன்மை பாராட்டுதல் யாவும் பொல்லாங்காயிருக்கிறது. **Blessed** என்ற வினைச்சொல்லுக்கு ஸ்தோத்திரி, ஸ்தோத்திரிக்கப்படுவதாக என்ற மொழிபெயர்ப்பே பரத்திலிருந்து இறங்கிவந்த ஞானம்.

27. ஐந்தாவதாக, பரிசுத்த வேதாகமத்தில் **பாக்கியவான்கள்** என்ற வார்த்தைக்கும் **blessed** என்ற ஆங்கில வினைச்சொல்லே உபயோகிக்கப்பட்டுள்ளது. அதற்கும் எடுத்துக்காட்டுகளை காண்போம்.

கர்த்தருடைய மலை பிரசங்கத்தில் **பாக்கியவான்கள்** என்ற சொல் அனைத்துக்கும் **blessed** என்ற ஆங்கில வினைச்சொல்லே உள்ளது. இது குறித்து மத்.5:3-11 வசனங்களை வாசிக்கலாம்.

அ) ஆவியில் எளிமையுள்ளவர்கள் **பாக்கியவான்கள் Blessed** are the poor in spirit.

ஆ) துயரப்படுகிறவர்கள் **பாக்கியவான்கள். Blessed** are they that mourn.

இ) சாந்தகுணமுள்ளவர்கள் **பாக்கியவான்கள். Blessed** are the meek.

ஈ) நீதியின் மேல் பசித்தாகமுள்ளவர்கள் **பாக்கியவான்கள். Blessed** are they who do hunger and thirst after righteousness

உ) இரக்கமுள்ளவர்கள் **பாக்கியவான்கள் Blessed** are the merciful.

ஊ) இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் **பாக்கியவான்கள். Blessed** are the pure in heart.

எ) சமாதானம் பண்ணுகிறவர்கள் **பாக்கியவான்கள். Blessed** are the peace makers.

ஏ) நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் **பாக்கியவான்கள். Blessed** are they who are persecuted for righteousness sake.

ஐ) என்னிமித்தம் உங்களை நிந்தித்து துன்பப்படுத்தி பலவிதமான தீமையான மொழிகளையும் உங்கள் பேரில் பொய்யாய் சொல்வார்களானால் **பாக்கியவான்களாயிருப்பீர்கள். Blessed** are ye, when men shall revile you, and persecute you, and shall say all manners of evil against you falsely, for my sake.

ஒ) எவனுடைய மீறுதல்கள் மன்னிக்கப்பட்டதோ, எவனுடைய பாவங்கள் மூடப்பட்டதோ அவன் பாக்கியவான். சங். 32:1 **Blessed** is he whose transgression is forgiven

ஓ) கர்த்தர் மேல் நம்பிக்கையாயிருக்கிற மனுஷன் **பாக்கியவான். Blessed** is the man who trusteth in the Lord.

**28. எனக்கு பிரியமானவர்களே, இவ்வாறாக blessed என்ற ஆங்கில வினைச்சொல்லுக்கு தமிழ் மொழிபெயர்ப்பில் அநேக அர்த்தங்கள் உண்டு. இது மனுஷனை மனுஷன் ஆசீர்வதிக்கும் இடத்தில் ஆசீர்வதித்தான் என்ற அர்த்தத்திலும்; தேவன் மனுஷனை ஆசீர்வதிக்குமிடத்தில் ஆசீர்வதித்தார் என்ற அர்த்தத்திலும்; தேவனுக்கடுத்த, தேவனுடைய நாமத்திற்கடுத்த இடங்களில் ஸ்தோத்திரம், ஸ்தோத்திரியுங்கள், ஸ்தோத்திரித்தார்கள் எனவும்; தேவன் அருளும் பாக்கியத்தை பெறுகையில் பாக்கியவான்கள் என்ற அர்த்தத்திலும் உள்ளது.**

29. முடிவாக பிரியமானவர்களே, **blessed** என்ற ஆங்கில வினைச்சொல் தேவஆவியினால் வெவ்வேறு இடங்களில், இடத்திற்கேற்ற தகுந்த அர்த்தத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இது முக்கியமாக ஆசீர்வதி, ஸ்தோத்திரி, பாக்கியவான்கள் என்ற அர்த்தத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. ஆசீர்வதி என்ற இடத்தில் ஸ்தோத்திரி என்ற அர்த்தத்தை புகுத்துவதும், ஸ்தோத்திரி என்ற இடத்தில் ஆசீர்வதி என்ற அர்த்தத்தை கொடுப்பதும், பாக்கியவான்கள் என்ற இடத்தில் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் என்ற அர்த்தத்தை கொடுப்பதும் அபத்தம், தேவதூஷனம். பாஸ்டர் ஐசக் வசந்தக்குமார் **ஸ்தோத்திரம்** என்ற இடத்தில் **ஆசீர்வதிக்கப்படுவாதாக** என்ற அர்த்தத்தை நுழைத்து மொழிபெயர்ப்பது ஜென்மசுபாவத்திற்குரிய ஞானம். பரிசுத்த ஆவிக்கு விரோதமான தூஷனம். **blessed** என்ற வினைக்சொல்லுக்கு தேவனுக்கடுத்த, தேவனுடைய நாமத்திற்கடுத்த இடங்களில் **ஸ்தோத்திரி, ஸ்தோத்திரியுங்கள்** என்ற மொழிபெயர்ப்பே பரத்திலிருந்து இறங்கிவந்த ஞானம். மாறாக தேவனுக்கடுத்த, தேவனுடைய நாமத்திற்கடுத்த இடங்களில் **blessed** என்ற வினைச்சொல்லுக்கு **ஆசீர்வதிக்கப்படுவதாக** என்று மொழிபெயர்ப்பது பேய்த்தனத்துக்கடுத்த ஞானம். நாம் அப்படிப்பட்ட ஞானத்தை தேவனுடைய சபையில் அங்கீகரிக்கக்கூடாது.

30. **Blessed be the name of the Lord** என்ற வார்த்தைக்கு **கர்த்தருடைய நாமத்திற்கு ஸ்தோத்திரம்** என்று பரிசுத்த ஆவி நமக்கு கொடுத்த ஞானமான மொழிபெயர்ப்பிலே கடந்து செல்வோம். அதுவே பரத்திலிருந்து வந்த ஞானமான மொழிபெயர்ப்பு. ஆதலால் நீங்கள் மதியற்றவர்களாயிராமல் கர்த்தருடைய சித்தம்

இன்னதென்று அறிந்து கொள்ளுங்கள், புரிந்து கொள்ளுங்கள், உணர்ந்து கொள்ளுங்கள். கர்த்தருடைய நாமம் ஆசீர்வதிக்கப்படுவதாக என்பது வேதவாக்கியங்களில் எங்கும் காணப்படாத, மாறாக சென்னை சபையில் மட்டும் காணப்படும் பேய்த்தனத்துக்கடுத்த மொழிபெயர்ப்பு. தேவனுடைய நாமத்தை துதிக்கும் உதடுகளின் கனி ஸ்தோத்திரம். எபி.13:15. ஆசீர்வாதம் அல்ல. ஆதலால் கர்த்தருடைய நாமம் ஆசீர்வதிக்கப்படுவதாக என்று கூறவே கூடாது. இது ஒரு அந்நிய போதனை. மாறாக கர்த்தருடைய நாமத்துக்கு ஸ்தோத்திரம் என்றே கூறவேண்டும். சென்னை சபையில் பரிசுத்த ஆவியின் வழிநடத்தலுக்கு இடமேயில்லை. அவர்களுடைய அனைத்து காரியங்கள் உலகஞானத்தைக் கொண்டே செயல்படுத்தப்படுகின்றன. ஏனென்றால் அது ஒரு உலக பிரகாரமான சபை. அது ஒரு ஆவிக்குரிய சபை அல்ல. ஆதலால் அதை விட்டு விலகி உங்களை காத்துக்கொள்ளுங்கள் என்று உங்களை எச்சரிக்க வேண்டியது என் மேல் விழுந்த கடமையாயிருக்கிறது. காதுள்ளவன் கேட்கக்கடவன். கூட்டத்தைப் பார்க்காதீர்கள். மனுஷன் முகத்தைப் பார்க்காதீர்கள். தேவனுடைய வார்த்தைக்கு உங்களை ஒப்புக்கொடுங்கள்.

31. சபைக்கும், மணவாட்டிக்கும் வித்தியாசம் உண்டென்று உங்களுக்கு தெரியுமா? மணவாட்டி அவரோடே கூட கலியாண வீட்டிற்குள் பிரவேசித்தாள். கதவு அடைக்கப்பட்டது. மற்ற கன்னிகைகள் சபையை சார்ந்தவர்களாயிருந்தனர். ஆம். அவர்கள் சென்னை சபையை சார்ந்தவர்களாயிருந்தனர். ஆண்டவரே எங்களுக்கு திறக்கவேண்டும் என்றார்கள். அதற்கு அவர்: உங்களை அறியேன் என்று மெய்யாகவே உங்களுக்கு சொல்லுகிறேன் என்றார். சென்னை சபையே கீழ்ப்படியாமையின் பிள்ளைகள் மேல் தேவ கோபாக்கினை வருவதால், ஒருவனும் உங்களை வீண் வார்த்தைகளினாலே மோசம்போக்காதபடிக்கு எச்சரிக்கையாயிருந்து காலத்தை பிரயோஜனப்படுத்திக்கொள்ளுங்கள். ஏனென்றால் அடுத்து நிகழ வேண்டிய காரியம் எடுத்துக்கொள்ளப்படுதலாயிருக்கிறது.

32. நம்முடைய சத்துருவாகிய சாத்தானானவன், **Blessed** be the name of the Lord என்பதை கர்த்தருடைய நாமம் ஆசீர்வதிக்கப்படுவதாக என்று கூறக்கூடாது என்று சொல்லுகிறாரே, அப்படியானால் மத். 6:9-ல் உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக என்று எழுதியுள்ளதே, இதற்கு இவர் என்ன பதில் சொல்லுகிறார் என்கிறான். அங்கு ஆசீர்வதிக்கப்படுவதாக, இங்கு பரிசுத்தமாக்கப்படுவதாக. உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக என்று சொல்லப்பட்டிருக்கும்போது உம்முடைய நாமம் ஆசீர்வதிக்கப்படுவதாக என்று கூறுவதில் என்ன தவறு என்று கேட்கிறார்கள். முதலாவது இவர்கள் அறியவேண்டுவது மத்.6:9-ல் Blessed be the name of the Lord என்று இல்லை. மாறாக Hallowed be thy name என்று உள்ளது. இங்கு blessed என்ற வினைச்சொல் உபயோகிக்கப்படவில்லை. அடுத்து நடப்பாயாக என்று கூறுவதும், ஓடு என்று கூறுவதும் ஒன்றாகிவிடாது. பாடு என்று கூறுவதும் படி என்று கூறுவதும் ஒன்றாகி விடாது. இரண்டு செயல்களுக்கும் வித்தியாசம் உண்டு. அவ்வாறாகவே ஆசீர்வதிக்கப்படுவதாக, பரிசுத்தமாக்கப்படுவதாக ஆக இரண்டிற்கும் வித்தியாசம் உண்டு.

33. பாருங்கள், மனுஷன் மனுஷனை ஆசீர்வதிக்கலாம், கர்த்தர் உன்னை ஆசீர்வதிப்பாராக என்று கூறலாம். அதற்கு அநேக உதாரணங்களை வேதவாக்கியங்களில் கண்டோம். அதே நேரத்தில் மனுஷனை மனுஷன் பரிசுத்தமாக்கமுடியாது. தேவனே ஒருவனை பரிசுத்தமாக்கமுடியும். இது குறித்து லேவி.22:32ஐ நாம் தியானிக்கும்போது என் பரிசுத்த நாமத்தை பரிசுத்தகுலைச்சலாக்காதிருப்பீர்களாக; நான் இஸ்ரவேல் புத்திரர் நடுவே பரிசுத்தர். நான் உங்களை பரிசுத்தமாக்குகிற கர்த்தர் என்று கூறப்பட்டுள்ளது. பாருங்கள் அவர் பரிசுத்தர். அவர் நாமத்தை நாம் பரிசுத்தகுலைச்சலாக்கக்கூடாது. மேலும் அவரே நம்மை பரிசுத்தமாக்குகிறவர். நம்மில் நாம் பரிசுத்தராக முடியாது.

34. அடுத்து உன் தேவனுடைய நாமத்தை பரிசுத்தகுலைச்சலாக்காதே என்றும் லேவி.18:21-ல் கூறப்பட்டுள்ளது. அதே வேளையில் உங்களால் பரிசுத்தகுலைச்சலாக்கப்பட்டதுமான என் மகத்தான நாமத்தை நான் பரிசுத்தம் பண்ணுவேன் என்றும் எசே.36:23-ல் கூறப்பட்டுள்ளது. ஆதலால் ஒருவன் பரலோக பிதாவை நோக்கி: உம்முடைய நாமம் எங்களால் பரிசுத்தகுலைச்சலாக்காதபடிக்கு பரிசுத்தப்படுவதாக என்று ஜெபிப்பதில் தவறு ஒன்றும் இல்லை. அது தேவனுடைய வார்த்தையின் அடிப்படையிலேயுள்ளது. மேலும் உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக Hallowed be thy name. இது பரிசுத்த நாமத்திற்குரியவர் தம்முடைய சீஷர்களுக்கு சொல்லிக்கொடுத்த ஒரு ஜெபம் ஆகும். நமக்கு அதின் மேல் கேள்வி எழுப்ப தகுதியில்லை.

35. **பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக. மத்.6:9. வல்லமையுடையவர் மகிமையானவைகளை எனக்குச் செய்தார் அவருடைய நாமம் பரிசுத்தமுள்ளது. லூக்.1:49 என் மகத்துவமான நாமத்தை நான் பரிசுத்தம் பண்ணுவேன். எசே.36:23. பாருங்கள், கேள்வி ஒன்று தேவனுடைய வார்த்தையில் இருக்குமானால், அதற்கு பதிலும் தேவனுடைய வார்த்தையிலிருந்தே வரவேண்டும். உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக. அப்படியானால் அவருடைய நாமத்தை பரிசுத்தப்படுத்துவது யார்? அவரே அவருடைய நாமத்தை பரிசுத்தப்படுத்துகிறவர். அல்லேலூயா!**

36. **Blessed be the name of the Lord**. **கர்த்தருடைய நாமம் ஆசீர்வதிக்கப்படுவதாக. கர்த்தருடைய நாமத்தை ஆசீர்வதிப்பது யார்? இதற்கு பாஸ்டர் ஐசக் வசந்தக்குமார் வேதவாக்கியங்களிலிருந்து பதில் கொடுக்கமுடியுமா? கர்த்தருடைய நாமம் ஆசீர்வதிக்கப்படுவதாக என்ற வார்த்தை வேதவாக்கியங்களில் எங்கும் கிடையாது. கர்த்தருடைய நாமம் ஆசீர்வதிக்கப்படுவதாக என்பது பரிசுத்த ஆவியினால் அருளப்பட்ட வேதவாக்கியம் அல்ல. இது தேவனுடைய வார்த்தை அல்ல. மாறாக இது பாஸ்டர் ஐசக் வசந்தக்குமாருடைய வார்த்தை. அது பிசாசினுடையது. ஆதலால் தேவனுடைய வார்த்தையில் இல்லாத ஒன்றுக்கு தேவனுடைய வார்த்தையிலிருந்து பதிலும் கொடுக்க முடியாது.**

37. வேதவாக்கியத்தில் நாம் உபதேசிக்கப்பட்டிருப்பது என்ன? உள்ளதை உள்ளதென்றும், இல்லதை இல்லதென்றும் சொல்லவேண்டும். இதற்கு மிஞ்சியது தீமையினால் உண்டாயிருக்கும். மத்.5:37. வேத வாக்கியத்தில் உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக (Hallowed be the name) மத்.6:9 என்று கூறப்பட்டிருக்குமானால் அதை அவ்விதமாகவே கூறி ஜெபம் பண்ணுவோம். வேதவாக்கியங்களெல்லாம் தேவஆவியினால் அருளப்பட்டிருக்கிறது. 2தீமோ.3:16. கர்த்தருடைய நாமத்திற்கு ஸ்தோத்திரம் (Blessed be the

name of the Lord) என்று கூறப்பட்டிருக்குமானால் அதை அவ்விதமாகவே கூறி கர்த்தரை ஸ்தோத்திரிப்போம். அப்பொழுது யோபு ஜெயங்கொண்டதுபோல நாமும் ஜெயம் கொள்ளுவோம். காயீனுடைய வழியில் நடக்கும் பாஸ்டர் ஐசக் வசந்தக்குமாரின் தந்திரமான உபதேசங்களின் மேல் ஜெயங்கொள்ளுவோம். சென்னை சபையின் வேற்றுமையான போதனைகளின் மேல் ஜெயங்கொள்ளுவோம். தேவனுடைய வார்த்தையின் மேல் நிலைத்து நிற்போம். கர்த்தருடைய நாமத்துக்கு ஸ்தோத்திரம் என்பதை கர்த்தருடைய நாமம் ஆசீர்வதிக்கப்படுவதாக என்று கூறி உங்களை நீங்களே பாஸ்டர் ஐசக் வசந்தக்குமாருடன் ஆக்கினைக்குள்ளாக தீர்த்துக்கொள்ளாதிருங்கள். இது குருடன், குருடனுக்கு வழிக்காட்டுவதற்கு ஒப்பாகும்.

38. தேவனுடைய வார்த்தையோடு ஒன்றை கூட்டுவதும் ஒன்றை குறைப்பதும் சென்னை சபைக்கு சகஜமாகிவிட்டது. அதாவது பழக்கமாகிவிட்டது. ஆபிரகாமின் தேவனும், ஈசாக்கின் தேவனும், யாக்கோபின் தேவனும் என்ற இடத்தில் யாக்கோபின் தேவனும் என்பதை எடுத்துவிட்டு பிரன்காமின் தேவனும் என்று பாடினார்கள். இப்பொழுது கர்த்தருடைய நாமத்துக்கு ஸ்தோத்திரம் என்ற இடத்தில், கர்த்தருடைய நாமத்தை போற்றி துதித்து மேன்மைபாராட்டவேண்டிய இடத்தில் கர்த்தருடைய நாமம் ஆசீர்வதிக்கப்படுவதாக என்று கர்த்தருடைய நாமத்துக்கு ஆசீர்வாதம் கூறுகிறார்கள். தேவனுடைய வார்த்தையோடு ஒன்றை கூட்டி குறைப்பது பிசாசு. நீங்கள் அவனை எதிர்த்து நில்லுங்கள். அப்பொழுது அவன் ஓடிப்போவான். நீங்கள் தலையாட்டி தஞ்சாவூர் பொம்மைகளாக இருப்பீர்களானால் அவன் உங்கள் தோல் மீது நன்கு சவாரி செய்து உங்களை ஆட்கொள்ளுவான். அந்த மிருகத்திற்கு பெருமையானவைகளையும் தூஷணங்களையும் பேசும் வாய் கொடுக்கப்பட்டது. அது தேவனை தூஷிக்கும்படி தன் வாயை திறந்து, அவருடைய நாமத்தை தூஷித்தது. உலகத்தோற்றமுதல் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியினுடைய ஜீவபுஸ்தகத்தில் பேரெழுதப்பட்டிராத பூமியின் குடிகள் யாவும் அதை வணங்குவார்கள். கர்த்தருடைய நாமத்தை தூஷிக்கும் சென்னை சபையாரே உங்களுடைய நாமம் ஜீவபுஸ்தகத்தில் எழுதப்பட்டுள்ளதா? உங்கள் கிரியைகளை நீங்கள் யார் என்பதை வெளிப்படுத்துகின்றதே!

39. தெயுதாஸ்சும், கலிலேயனாகிய யூதாஸ்சும் தங்களைத்தாங்களே ஆவிக்குரிய புருஷர்கள் என்று அழைத்துக்கொண்டு மேட்டிமையினால் இறுமாப்பாய் மந்தையை ஆளுகை செய்தார்கள். ஏழை, எளிய விசுவாசிகளின் தசமபாகம், காணிக்கைகளால் ஐசுவரியவான்களாகி, பின் அவர்களையே தங்கள் ஐசுவரியத்தினால் ஒடுக்கினார்கள். முடிவு, அனைவரும் சிதறிப்போனார்கள், மடிந்துபோனார்கள். இது நமக்கு திருஷ்டாந்தமாக எழுதிவைக்கப்பட்டுள்ளது. ஆதலால் பிரியமானவர்களே, நீங்கள் சார்ந்திருக்கும் சபை உங்களை பரத்திலிருந்து வந்த ஞானத்தைக் கொண்டு வழிநடத்துகிறதா? அல்லது லௌகிக ஞானத்தைக் கொண்டு வழிநடத்துகிறதா என்பதை நீங்களே தேவனுடைய வார்த்தையைக் கொண்டு, இக்காலத்திற்குரிய செய்தியை கொண்டு சோதித்து அறியுங்கள். உங்களை நீங்களே பரிட்சித்து பாருங்கள். நான் உங்களுக்கு சுருக்கமாய் எழுதின இந்த புத்திமதியான செய்தித்தொகுப்பை நீங்கள் பொறுமையாய் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டிக்கொள்ளுகிறேன். நிராகரிக்கும் வேலையில் அதன் பலனை நீங்கள் நிச்சயமாக அடையவேண்டியதாயிருக்கும்.

40. எனக்கு பிரியமான பெரவலூர் பாஸ்டர் ஐசக் வசந்தக்குமார் அவர்களே, வலசரவாக்கம் பாஸ்டர் சாமுவேல் அவர்களே, Truth is not judged by the crowds of two or three hundreds . தெயுதாஸ்சும், கலிலேயனாகிய யூதாசும் அந்த கூட்டத்தைக்கொண்டுதான் பெருமை பாராட்டினார்கள். முடிவு அந்தோ பரிதாபம்! நீங்கள் இருவரும் உங்களை தாழ்த்துங்கள். இன்றைக்கு நமக்குத் தேவையானது அதிகமான உலகப்பிரகாரமான சொத்துக்கள் அல்ல; அதை நாம் பெற்றுள்ளோம். நமக்கு பெரிய ஆலயங்க்ள் அவசியம் இல்லை. **நமக்கு அதிக அங்கத்தினர்களைக்கொண்ட சபையோர் அவசியம் இல்லை. நமக்கு வானொலியிலும் தொலைக்காட்சியிலும் அதிகமான பிரச்சாரங்கள் அவசியம் இல்லை. இத்தகைய காரியங்கள் எதுவுமே நமக்கு அதிகமாக அவசியம் இல்லை.** இன்றைக்கு ஆவிக்குரிய பிரகாரமாக இருக்க நமக்கு தேவையென்னவெனில், ஒரு மனிதன் தன்னிடம் ஒரு காசும் இல்லாத அளவுக்கு ஏழ்மையிலிருந்தபோதிலும், தன்னை தேவனுக்கு முன்பாக தாழ்த்தி, அவனுக்குள்ளிருக்கும் ஆவி தேவனுடைய நன்மையினால் திருப்தியாகி, உள்ளில் அவனுடைய இருதயத்தில் ஒரு எழுப்புதல் ஏற்பட்டு, அவனுடைய சுபாவத்திலும், அவன் வாழ்ந்துக்கொண்டிருக்கும் சூழ்நிலையிலும் மாறுதல் ஏற்படும்வரைக்கும் ஜெபம் செய்தலேயாகும். (தியானியுங்கள், **தேவனைக்குறித்து நிச்சயமுடையவர்களாயிருங்கள்.** பத்தி 21.

41. **கர்த்தரை, கர்த்தருடைய நாமத்தை துதிக்கும் உதடுகளின் கனியாகிய நன்றிபலி: ஸ்தோத்திரம்.**
அ) ஒருவன் ஆவியினாலே பரிசுத்தமாக்கப்படுகிறதினாலும், சத்தியத்தை விசுவாசிக்கிறதினாலும், இரட்சிப்படையும்படிக்கு, ஆதிமுதல் தேவனால் தெரிந்துக்கொள்ளப்பட்டபடியால் கர்த்தரை ஸ்தோத்திரிக்கிறான். 2தெச.2:13.
ஆ) தேவனுடைய கிருபைக்காக அவரை ஸ்தோத்திரிக்கிறான். 1கொரி.1:6.
இ) ஒருவன் தேவவசனத்தை அனுப்பப்பட்டவர்கள் மூலமாக கேட்டு, அதை தேவவசனமாகவே ஏற்றுக்கொண்டு கர்த்தரை ஸ்தோத்திரிக்கிறான். 1தெச.2:13.
ஈ) ஒருவனை தேவன் இருளின் அந்தக்காரத்தினின்று விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய இராஜ்யத்திற்கு உட்படுத்தினதினால் கர்த்தரை ஸ்தோத்திரிக்கிறான். கொலோ.1:13.
உ) அவர் தன்னை ஒளியிலுள்ள பரிசுத்தவான்களுடைய சுதந்திரத்தில் பங்கடையவதற்கு தகுதியுள்ளவராக்கினதினால் தேவனை ஸ்தோத்திரிக்கிறான். கொலோ.1:12.
ஊ) கர்த்தர் நம்முடைய அக்கிரமங்களையெல்லாம் மன்னித்து, நம்முடைய நோய்களையெல்லாம் குணமாக்கி, நம்முடைய பிராணனை அழிவுக்கு விலக்கி மீட்டு, கிருபையினாலும், இரக்கத்தினாலும் நம்மை முடிசூட்டியதினால் அவரை ஸ்தோத்திரிக்கிறோம். சங்.103:3,4.
எ) நாம் நமக்கு ஒப்புவிக்கப்பட்ட உபதேச சட்டங்களுக்கு மனப்பூர்வமாய் கீழ்ப்படிந்ததினாலே கர்த்தரை ஸ்தோத்திரிக்கிறோம். ரோ.6:17.
ஏ) கர்த்தர் நமக்கு பாதாளத்தின் மேலும், மரணத்தின் மேலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே ஜெயம் கொடுத்ததினால் அவரை ஸ்தோத்திரிக்கிறோம். 1கொரி. 15:57.
ஐ) கர்த்தராகிய இயேசு கிறிஸ்து ஒருவனை உண்மையுள்ளவனென்றெண்ணி தம்முடைய சரீரமாகிய சபை பக்திவிருத்தியடைய ஏற்படுத்திய ஊழியத்தில் பங்கடையச்செய்து மனுஷருக்கென்று ஊழியம் செய்யாமல்,

கர்த்தருக்கென்றே நல்மனதோடே ஊழியம் செய்ய அவனை பலப்படுத்தினதற்காக கர்த்தரை ஸ்தோத்திரிக்கிறான். எபே.6:8, 1தீமோ.1:12.

ஒ) இயேசுவின் இரத்தத்தினால் மீட்கப்பட்டவர்கள் கர்த்தரை ஸ்தோத்திரிக்கிறார்கள். சங்.107:1-3.

ஓ) இயேசு தன்னுடைய பாவங்களுக்காக மரித்து அடக்கம்பண்ணப்பட்டு உயிர்த்தெழுந்தார் என்று விசுவாசிக்கிற விசுவாசிகள் அவரை ஸ்தோத்திரிக்கிறார்கள். வெளிப்படுத்தப்பட்ட சத்தியத்தை அறியும்படி மனக்கண் திறக்கப்பட்டவர்கள் அவரை ஸ்தோத்திரிக்கிறார்கள். 1தீமோ. 4:1-6.

ஔ) நாம் நம்முடைய வார்த்தையினாலாவது கிரியையினாலாவது எதைச் செய்தாலும், அதையெல்லாம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே செய்து, பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரிப்போம். கொலோ.3:17.

ஃ) தேவன், தம்முடைய தேவ இரகசியங்களை ஞானிகளுக்கும் கல்விமான்களுக்கும் மறைத்து, பாலகராகிய நமக்கு வெளிப்படுத்தினபடியால் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரிப்போம். மத்.11:25.

க) தேவன் தன்னுடைய ஜெபத்திற்கு செவி கொடுத்ததற்காக ஒருவன் அவரை ஸ்தோத்திரிக்கிறான். யோா.11:41.

கா) கர்த்தர் நமக்கு செய்த சகல உபகாரங்களுக்காகவும் அவரை ஸ்தோத்திரிப்போம். சங்.103:3.

கி) நாம் இவ்வாறாக பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரிப்பது அவருடைய திருவுளத்துக்குப் பிரியமாயிருக்கிறது. மத்.11:26.

42. நம்முடைய ஸ்தோத்திரத்தினால் தேவனுடைய மகிமை விளங்குகிறது. 2கொரி.4:15, சங்.69:30. ஆதலால் நாம் எல்லாவற்றிற்கும் எப்பொழுதும் இடைவிடாமல் தேவனை ஸ்தோத்திரிப்போம், ஸ்தோத்திரத்தில் பெருகுவோம். 1தெச.5:18, கொலோ.2:7, பிலி.4:6. நம்முடைய இருதயத்தில் சங்கீதங்களினாலும், கீர்த்தனைகளினாலும், ஞானப்பாட்டுகளினாலும் கர்த்தரை பாடிக்கீர்த்தனம்பண்ணி நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே எப்பொழுதும், எல்லாவற்றிற்காகவும் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரிப்போம். எபே.5:20. நாம் குறைவாய் தேவனை ஸ்தோத்திரிப்பது அவரை துக்கிக்கச் செய்கிறது. லூக்.17:15-18. தங்கள் இருதயத்தில் உணர்வில்லாதவர்கள், தங்களுடைய சிந்தனைகளில் வீணர்கள், தேவனை அறிந்திருந்தும், தேவனை மகிமைப்படுத்தாமல், தேவனை ஸ்தோத்திரியாமல் அவரை, அவருடைய நாமத்தை ஆசீர்வதிக்கிறார்கள், ஆசீர்வாதம் கூறுகிறார்கள். ரோ.1:21.

43. பிரியமானவர்களே, அன்று விசுவாசிகள் நாடோறும் தேவாலயத்திலே தேவனை புகழ்ந்து துதித்துக்கொண்டிருந்தார்கள். லூக் 24:53. Praising and blessing God. வாருங்கள் நாமும் நாடோறும் தேவனுடைய சபையில் தேவனை புகழ்ந்து துதித்துக்கொண்டிருப்போம். சென்னை சபையார் மட்டும் நாடோறும் தேவனுடைய சபையில் தேவனுடைய நாமத்துக்கு ஆசீர்வாதம் கூறிக்கொண்டிருக்கட்டும். அவர்கள் தங்கள் வீம்புகளில் மேன்மை பாராட்டிக்கொண்டிருக்கட்டும். ஆனால் அது பொல்லாங்காயிருக்கிறது. கடைசியாக, சென்னை சபையிலுள்ள சகோதரர்களே, சகோதரிகளே, நீங்கள் உங்கள் வாயின் வார்த்தைகளினாலே கர்த்தரை வருத்தப்படுத்தாதீர்கள். நீங்களோ இந்நாட்களில் செம்மையான வழியை விட்டு விலகி அநேகரை வேதத்தை குறித்து இடறப்பண்ணுகிறீர்கள். சத்தியத்திற்கு கீழ்ப்படியுங்கள், பகுத்தறிவுள்ளவர்களாயிருங்கள், எல்லாவற்றிலும் மனத்தெளிவுள்ளவர்களாயிருங்கள், நற்சீர் பொருந்துங்கள், ஏக சிந்தையுள்ளவர்களாயிருங்கள், சமாதான மாயிருங்கள், ஜீவவசனத்தை பிடித்துக்கொண்டு உலகத்திலே சுடர்களைப்போல பிரகாசியுங்கள். உங்கள் பாஸ்டர் தன் லௌகிக ஞானத்தினால் உங்களை கொள்ளை கொண்டு போகாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள். அப்பொழுது அன்புக்கும் சமாதானத்திற்கும் காரணராகிய தேவன் உங்களோடுகூட இருப்பார்.

44. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய கிருபையும், தேவனுடைய அன்பும், பரிசுத்த ஆவியினுடைய ஐக்கியமும் உங்கள் அனைவரோடுங்கூட என்றென்றைக்கும் சதாகாலங்களிலும் இருப்பதாக. ஆமென்.

நவம்பர், 2004

கிறிஸ்துவின் அன்பில்,
சகோ.காலேப் யோசுவா

## *சவால் ஒன்று நேற்றும், மற்றொன்று இன்றும்*

### *நேற்றைய சவால்*

**நான் அன்று மும்பை பாஸ்டர் டேனியேல் கிறிஸ்டியானுக்கு கொடுத்த சவால்:**
The Message of the Hour Outreach. டிசம்பர், 2000. பத்தி 22.

1. **இப்பொழுது, இங்கு நான் பகிரங்கமாக அறிவிப்பது என்னவென்றால், பாஸ்டர் டேனியேல் கிறிஸ்டியான் தனது ஊழியத்தின் பாதையில் அக்கினி ஸ்தம்பம் தோன்றினது என பிரசுரித்த அனைத்து புகைப்படங்களின் நெகட்டிவ்களை ஆவிக்குரிய, விஞ்ஞான, இரசாயன ரீதியில் பரிசோதித்து, அது அனைத்தும் தேவனுடைய மகிமையின் பிரசன்னம் என கர்த்தருடைய வருகை காலத்தாமதமாகுமானால் மூன்று மாதத்திற்குள் நிருபித்துவிட்டால், நான் தேவனுடைய மனுஷன் மேல் குற்றம் சுமத்தும்பொருட்டு அவர் மேல் குற்றஞ்சாட்டுகிறவன் என்றும், கள்ள கபடமுள்ள வேலையாள் என்றும் முத்திரையிடப்பட்டு என் ஊழியத்தை முற்றிலுமாக விட்டுவிடுகிறேன். ஆனால் பாஸ்டர் நிருபிக்கத் தவறிவிட்டால் அவரது ஊழியம் குறித்து நீங்களே முடிவு செய்யுங்கள். நான் பாஸ்டருக்கு இந்தச் சவாலைவிட நிர்பந்தப்படுத்தப்பட்டிருக்கிறேன். ஏனென்றால் ஊழியத்தில் மாய்மாலம், வஞ்சகம் எங்கே இருக்கிறது என்பதை சபை அறியவேண்டிய காலக்கட்டத்துக்குள்ளிருக்கிறது.**

2. ஆனால் பாஸ்டர் அவருடைய அக்கினி ஸ்தம்ப காட்சிகள் தேவனுடைய பிரசன்னம் தான் என்பதை நிருபிக்க இன்றுவரை தவறிவிட்டார். ஆனால் இந்த அந்நிய அக்கினி ஸ்தம்ப காட்சிகளுக்கு ஒரு முற்றுப் புள்ளி வைத்து விட்டார் எனவும், அக்கினி ஸ்தம்ப காட்சி படங்களும் பல இடங்களில் அகற்றப்பட்டுவிட்டன எனவும் அறிய வந்தேன். ஆனால் அது எந்த அளவுக்கு உண்மையென எனக்குத் தெரியாது. ஆனால் தேவனால்

தெரிந்துக்கொள்ளப்பட்டவர்கள் வஞ்சிக்கப்படமுடியாது. ஆதலால் தேவனால் அழைக்கப்பட்டவர்கள், தெரிந்துக்கொள்ளப்பட்டவர்கள், உண்மையுள்ளவர்கள் மட்டும் அவரது ஊழியத்தை அறிந்து, புரிந்து கொண்டார்கள். மனக்கண் திறக்கப்படாதவர்கள் படுகுழியை நோக்கி வீரநடை பிரயாணம் செய்துகொண்டிருக்கிறார்கள்.

## *இன்றைய சவால்*

**நான் இன்று கோவை சுவிசேஷகர் கே. ராஜாவுக்கு கொடுத்துள்ள சவால்:**

**இயேசுவே வாரும்,** *திருமண முத்தம் செய்தித்தொகுப்பிற்கு எதிரான வழக்கு விசாரணை, பக்கம் 9, பத்தி 3, அக்டோபர், 2004 (2)*

1. **ஏழு தூதர்கள் கூட்டம் தான் கர்த்தருடைய இரண்டாம் வருகை, அது தான் அரைமணிநேர அமைதல் என்று தீர்க்கத்தரிசியின் செய்தியிலிருந்து சகோ.ராஜா எடுத்துக்காட்டுக்களை கொடுப்பாராகில் நான் என் ஊழியத்தை நிறுத்திவிடுகிறேன். யூகம் எதுவும் இருக்கக்கூடாது. நேரிடையான பதில் இருக்கவேண்டும்.**

2. **மீண்டுமாக, இங்கு இந்த சவாலை புதுப்பித்துக்கொள்ள விரும்புகிறேன்.**
**ஏழாம் சபைக்காலத் தூதனும், தீர்க்கதரிசியுமாகிய சகோ.வில்லியம் மாரியன் பிரன்காம் 1963-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28-ம் தேதி சூரிய அஸ்தமன நேரத்தில், ஃபிளேக் ஸ்டாப் (Flagstaff), அரிசோனாவின் (Arizona) மேல் ஏழு தூதர்களின் செட்டைகளினால் உருவாக்கப்பட்ட மகத்தான மேகம் தான் வெளி.8:1, அரைமணிநேர அமைதல், மற்றும் கர்த்தருடைய இரண்டாம் வருகையின் (இரகசிய வருகை/ எடுத்துக்கொள்ளப்படுதல்) ஆரம்பம் அதாவது அன்று கர்த்தருடைய முதலாம் வருகை மரியாளின் வயிற்றில் ஆரம்பித்து 33 1/2 வருட காலத்தைக் கொண்ட காலமாக இருந்தது. அதுபோன்று கர்த்தருடைய இரண்டாம் வருகை 28.2.1963 அன்று ஆரம்பித்து அது சபை எடுத்துக்கொள்ளப்படுதல் நடக்கும் வரையுள்ள காலமாகும் என கூறியுள்ளார் என்று இக்காலத்துக்குரிய செய்தியிலிருந்து பிரத்தியட்சமான ஆதாரங்களை கொடுத்துவிட்டால், அன்று முதல் நான் 1978-ல் தேவன் என்னை அவருடைய சரீரமாகிய சபை பக்திவிருத்தியடைய சுவிசேஷகனாக ஏற்படுத்திய ஊழியத்தை விட்டு விலகுகிறேன்.** 50 பைசா போஸ்ட் கார்டில் தீர்க்கதரிசி இது குறித்து எந்தச் செய்தியில், எந்த பத்தியில் கூறியுள்ளார் என்பதை எழுதி எனக்கு அனுப்பி வைத்தாலே போதும். இதற்காக மீண்டும் ரூ.15,000/- செலவு செய்து ஒரு கூட்டத்தை ஓடி, தேடி, கண்டுப்பிடித்து கூட்டவேண்டிய தேவையில்லை. வலது இடது கைக்கு வித்தியாசம் தெரியாத, ஏழை எளிய மக்களுடைய காணிக்கை, தசமபாகத்தை வீணாக உலகமக்களின் கையில் கொடுக்க தேவையில்லை. வீடு வீடாக சென்று என் கூட்டத்திற்கு வாருங்கள், வாருங்கள் என கை கால்களைப் பிடித்து பாதம் தொட்டு வணங்கி யாரையும் 2.10.2004 அன்று பாண்டியன் ஹோட்டலுக்கு சரீர விருந்துக்கு அழைத்தது போன்று மறுபடியும் அழைக்க தேவையில்லை. இது உங்களுக்கும் எனக்கும் இடையிலுள்ள ஆவிக்குரிய போராட்டம்.

3. என்னுடைய சவாலின்படி சகோ.கே.ராஜா நிருபிக்காவிட்டால், இவர் தன் ஊழியத்தின் பெட்டி, படுக்கைகளை சுருட்டிக்கொண்டு, வாயை மேலும் கீழும் பொத்திக்கொண்டு சபையில் ஒரு விசுவாசியாக அமர்ந்திருக்கவேண்டும். கர்த்தருடைய வருகை காலதாமதமாகுமானால் இந்த சவாலை இன்று முதல் ஆறு மாத காலங்களுக்கு கொடுக்கிறேன். இந்த சவால் எதிர்க்கட்சிகளுக்கு தலைவராக இருந்து செயல்படும் சுவிசேஷகர் கே.ராஜாவுக்கு மட்டுமல்ல, அவரது தோழமைகட்சி தலைவர்களுக்கும் ஆகும். தோழமைகட்சி தலைவர்கள் என்று கூறும்போது அது பாஸ்டர் காபிரியேல் பக்தசிங், பாஸ்டர் மேத்யூ கண்ணன், பாஸ்டர் அந்தோனி ராஜ், பாஸ்டர் டேனியேல் ராஜ், பாஸ்டர் மோசஸ் பாபு, சுவிசேஷகர் அந்தோணி ஜோசப், ஒரு பக்கம் தலை மற்றொரு பக்கம் வாலைக் காட்டும் பாஸ்டர் சாமுவேல் தங்கமணிக்கும் பொருந்தும். நீங்களும் இந்த சவாலை ஏற்றுக்கொண்டு, அதை நிரூபிக்கத் தவறினால் உங்கள் சபைகளை உண்மையும், உத்தமுமான தேவனுடைய மனுஷனிடம் ஒப்படைத்துவிட்டு, நீங்கள் விசுவாசிகளாக அந்த சபையில் அமர்ந்திருங்கள். எல்லாப் பக்தியோடும், நல்லொழுக்கத்தோடும், கலகமில்லாமல் அமைதலுள்ள ஜீவனம் பண்ணுங்கள். அதுவே உங்களை குறித்து தேவனுக்கு முன் பிரிதியாக இருக்கும். கர்த்தருடைய ஊழியம் உங்களுக்கெல்லாம் ஒரு கேடா!

4. பிரியமானவர்களே, இந்த சவாலுக்கு வாக்குவாதம் வேண்டாம், பெரிய கூட்டத்தை கூட்டவேண்டாம். புல ஆயிரங்கள் செலவு தேவையில்லை. 50 பைசா போஸ்ட் கார்டில் செய்தியிலிருந்து ஆதாரங்கள் கொடுத்தால் போதும். பெண்களுக்கு மாதவிடாய் 28 நாட்கள் என்ற பேய்த்தனத்துக்கடுத்த வெளிப்பாடு இளம் வாலிபர்களைக் கொண்ட கூட்டத்திற்கு மனமகிழ்ச்சியாக இருக்கும். ஆனால் தேவனுடைய சபை அது ஒரு பிசாசினுடைய நயவஞ்சக வெளிப்பாடு என அறிந்திருப்பதால் அதற்கு அது தேவையில்லை. அடுத்து யாருடைய யூகமும் இங்கு தேவையில்லை, வெளிப்பாடும் தேவையில்லை. இக்காலத்திற்குரிய செய்தி ஒன்றையே ஆதாரமாக கொடுத்தால் போதும். ஆதாரம் நீதானையா!, என் துரையே ஆதாரம் நீதானையா!!, உன் தாசனுக்கு ஆதாரம் நீதானையா!!!

## *ஒரு சுருக்கமான அவசர தந்திச்செய்தி*

**சகோ. கே. ராஜாவின் சுற்றறிக்கை நாள் 25.10.2004, 6வது பக்கத்துக்கு அடுத்த இணைப்புத் தாளில்** முதல் பக்கம்.

1. இங்கு நான் கோவை சகோ. ஜே. ராபினுக்கு 3.9.1993 அன்று எழுதிய கடித நகல் கொடுக்கப்பட்டுள்ளது. இந்தக் கடிதத்தின் தொடக்கத்தைப் பார்த்தால் சகோ. ராபின் சென்று வரும் சபையில் எழுந்த பிரச்சனைகளை, அவர்கள் எனக்கு எழுத, நான் தேவனுடைய வார்த்தையிலிருந்து, இக்காலத்துக்குரிய செய்தியிலிருந்து பதில் எழுதியுள்ளேன். அங்கு என் சுயவிளக்கத்திற்கு இடம் இருந்ததாகத் தெரியவில்லை. இந்த சம்பவத்தின் முழு விபரங்களை என்னால் திரும்பிப் பார்க்க முடியவில்லை. ஏனென்றால் காலங்கள் சுமார் 11 ஆண்டுகள் கடந்துவிட்டன. சகோ. ராஜாவுக்கு ஒரு சம்பவம் நடந்து அது சுமார் 25 ஆண்டுகளானாலும் அன்று நடந்த சம்பவங்கள் அனைத்தும் எப்பொழுதும் அப்படியே அவரது ஞாபகத்திலிருக்கும். எப்படியெனில் ஒரு சம்பவத்தின் ஒரு பகுதியை வைத்து மீதமுள்ள பகுதிகளை தனக்கு சாதகமாக ஜோடித்து, கூட்டி, குறைத்து கொண்டுவருவதில் அவருக்கு நிகர் அவரே. உருட்டுவதும், புரட்டுவதும், தில்லுமுல்லுகளும் இவருக்கு

கைதேர்ந்த கலையாகும் ஏனென்றால் இவர் தன் பிதாவாகிய பிசாசானவனால் உண்டானவர். ஆதலால் அவர் பொய் பேசும் போது தன் சொந்தத்தில் எடுத்துப் பேசுகிறார், எழுதுகிறார்.

2. **இந்த எனது கடிதத்தில் நான் தீர்க்கதரிசியின் செய்தி *இயேசு கிறிஸ்துவைப் பற்றிய வெளிப்படுத்துதல்,* முதலாம் பாகம், பக்கம் 75, பத்திகள் 307, 308ஐ குறிப்பிட்டுள்ளேன். அதன் சாராம்சம் பின்வருமாறு: கண்கள் யாவும் அவரைக் காணும். கண்கள் யாவும் அவரைக் காணும் என்று சொன்னால், அது சபை எடுத்துக்கொள்ளப்படுதலை குறிக்கவில்லை என்றாகிறது. அது எடுத்துக்கொள்ளப்படுதல் அல்ல. அவர் இங்கே எதை குறித்துப் பேசுகிறார்? இரண்டாம் வருகையை குறித்துப் பேசுகிறார்.**

3. நான் இதற்கான என்னுடைய விளக்கத்தில் வெளி.1:7 சம்பவத்தை சகரி.12:10 உடன் ஒப்பிட்டுள்ளேன். இதை சகோ.கே.ராஜா மறுக்கமுடியுமா? அதோடு மட்டுமல்ல, தீர்க்கதரிசியின் வாயின் வார்த்தையின்படி எடுத்துக்கொள்ளப்படுதல் கர்த்தருடைய இரண்டாம் வருகை அல்ல எனவும் எழுதியுள்ளேன். இதில் நான் என்ன தவறு செய்துவிட்டேன்? பத்தி 307, 308க்கு மாறாக நான் எதுவும் எழுதவில்லையே. கலிங்கம் போட்டவர்களுடைய கண்களுக்கு நான் எழுதியதில் தவறு எதுவும் தெரியாது.

4. அடுத்து எனது **இயேசுவே வாரும்,** ***திருமண முத்தம் செய்தித்தொகுப்பிற்கு எதிரான வழக்கு விசாரனை,*** அக்டோபர் 2004 (2) இதழில் பக்கம் 9, பத்திகள் 5-7 சாரம்சங்களை கீழே தருகிறேன்.

பத்தி 5: Watch Christ, First coming, He come a mortal to bleed and die. Is that right? That's His first coming. The second coming is the Rapture. We meet Him in the skies, immortal. His third coming, He's the incarnate God. Amen! God Emmanuel to reign on earth. That's right. Only three. (Revelation of the Seven Seals, page 308, last para in the old edition, page 274, para 210 in the new edition).

**பத்தி 6: இது தமிழில் ஏழு முத்திரைகளின் வெளிப்பாடு,** பக்கம் 521, பத்தி 210-ல் இவ்வண்ணமாக உள்ளது.

*பத்தி 7: கிறிஸ்துவை கவனியுங்கள், முதலாவதாக கிறிஸ்து இரத்தம் சிந்தி மரிப்பதற்கென மனுஷனாக தோன்றினார். அது சரியா? அது அவருடைய முதலாம் வருகை. எடுத்துக்கொள்ளப்படுதலின் போது அவர் இரண்டாம் முறை வருகிறார். அப்பொழுது நாம் மறுரூபமாகி அவரை ஆகாயத்தில் சந்திப்போம். அவர் மூன்றாவது முறை வருகையில், அவர் தேவஅவதாரமாயிருக்கிறார். தேவன், இம்மானுவேலாய் பூமியில் ஆளகை செய்வதற்கென வருகிறார். அது உண்மை. அவர் மூன்று முறை மட்டுமே வருகிறார்.*

5. எதிர்க்கட்சிகளின் தலைவரே அவரது தோழமைகட்சிகளின் தலைவர்களே நீங்கள் யாவரும் முதலில் அறிந்து கொள்ள வேண்டியது: தீர்க்கதரிசியின் செய்தியை நீங்கள் அறிந்து கொள்ளும்படி தேவன் உங்களுடைய மனதை திறக்காவிட்டால் நீங்கள் இக்காலத்திற்குரிய செய்தியில் ஒன்றையும் அறிந்து, புரிந்து கொள்ள முடியாது. நீங்கள் தேவ சித்தத்திற்கு புறம்பாக அவருக்கென்று ஒரு ஊழியம் செய்து கொண்டுவருவதால், இந்தச் செய்தியை அறிந்து, புரிந்து கொள்வது உங்களுக்கு மிகமிக கஷ்டம். ஆதலால் உங்கள் நிலையை அறிந்து, தேவனுக்கு முன்பாக உங்களை தாழ்த்துங்கள், மனந்திரும்புங்கள்.

6. ஏழு முத்திரையில் தீர்க்கதரிசி கர்த்தருடைய வருகையை 3 பாகமாக பிரித்து, கிறிஸ்து இரத்தம் சிந்தி மரிப்பதற்கென மனிதனாக தோன்றியதை முதலாம் வருகை எனவும்; வரும் நாட்களில் மணவாட்டி மறுரூபமாகி ஆகாயத்தில் அவரை சந்திக்கும் வேளையை, அதாவது எடுத்துக்கொள்ளப்படுதலை, அதாவது கர்த்தருடைய இரகசிய வருகையை கர்த்தருடைய இரண்டாம் வருகை எனவும்; தேவன், இம்மானுவேலாய் பூமியை ஆளுகைசெய்வதற்கென வரயிருப்பதை கர்த்தருடைய மூன்றாம் வருகை எனவும் கூறுகிறார்.

7. **தீர்க்கதரிசி வாயின் வார்த்தை பிரகாரமாக மணவாட்டி மறுரூபமாகி ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்படுதல் கர்த்தருடைய இரண்டாம் வருகை என நான் எழுதியுள்ளேன். The second coming of the Lord is the Rapture. கர்த்தருடைய இரண்டாம் வருகை ஏழு தூதர்களின் கூட்டம் அல்ல. ஏழு தூதர்களின் கூட்டம் அரைமணி நேர அமைதலும் (வெளி.8:1) அல்ல. நீங்கள் என்னுடைய உபதேசம் தவறு என்று கூறி, நீங்கள் விசுவாசிக்கும் தீர்க்கதரிசியை, அவருடைய செய்தியை மறைவாக குற்றப்படுத்துகிறீர்கள். சகோதரரே, நீங்கள் குருடர்களுக்கு வழிகாட்டும் குருடர்களே. உங்களுடைய வழி மரணம். அது நிச்சயம். நீங்கள் மனந்திரும்பாமற்போனால், அது நிச்சயம்.**

8. **இப்பொழுது நன்கு கவனியுங்கள். தீர்க்கதரிசி இயேசு கிறிஸ்துவைப் பற்றிய வெளிப்படுத்துதலில் வெளி.1:7ஐ அது எடுத்துக்கொள்ளப்படுதல் அல்ல, அது கர்த்தருடைய இரண்டாம் வருகை என்கிறார். அடுத்து ஏழு முத்திரையில் கர்த்தருடைய வருகையை மூன்று பாகங்களாக பிரித்து, அதில் எடுத்துக் கொள்ளப்படுதல், அதாவது மணவாட்டி ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்படும் வேளையை கர்த்தருடைய இரண்டாம் வருகை என்கிறார்.**

9. பரிசுத்த வேதாகமத்தில் மூன்று முறை கர்த்தர் வருகிறார் என்று எங்கும் கூறப்படவில்லை. முதல் வருகை அவர் மனுஷகுமாரனாக ஒரு ஸ்தீரியின் வயிற்றில் பிறந்தது. இரண்டாம் வருகை மீண்டும் அவர் மாம்சத்தில் தாவீதின் குமாரனாக பூமியில் வந்து ஆளுகை செய்வதாகும். கர்த்தருடைய இரகசிய வருகை, அதாவது மணவாட்டி எடுத்துக்கொள்ளப்படுதல் ஒரு வருகையாக வேதாகமத்தில் கூறப்படாமல் எடுத்துக்கொள்ளப்படுதல் என்றே கூறப்பட்டுள்ளது. ஆனால் தீர்க்கதரிசி கர்த்தருடைய வருகையை நமக்கு விளக்குவதற்காக எடுத்துக்கொள்ளப்படுதலை கர்த்தருடைய இரண்டாம் வருகை எனக் கூறுகிறார். நானும் அதை அவருடைய வாக்கின்படியே எழுதி அதற்கு ஆதாரமான செய்தியை கொடுத்துள்ளேன்.

10. ஆவிக்குரியவர்கள், தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஆவிக்கேற்றப் பிரகாரமாய் ஆராய்ந்து நிதானிப்பதால் தீர்க்கதரிசி தவறு எதுவும் செய்யவில்லை, தவறான உபதேசம் எதுவும் கொடுக்கவில்லை என்பதை அறிவார்கள். அப்படியானால் நானும் தவறு எதுவும் செய்யவில்லை, தவறான உபதேசம் எதுவும் கொடுக்கவில்லை என்பதையும் அறிவார்கள். ஏனென்றால் நான் அவர் வாயின் வாக்கையே எழுதியுள்ளேன்.

11. சகோதரர்களே நீங்கள் குடாக்கப்பட்டிருக்கிறீர்கள். உங்கள் கண்கள் திறக்கப்பட கர்த்தரை வேண்டிக் கொள்ளுங்கள். நானும் உங்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறேன்.

12. முடிவாக, நான் நேற்றொரு உபதேசம், இன்றொரு உபதேசம் கொண்டு வரவில்லை. அன்று எழுதியதும், இன்று எழுதியதும் ஒரே காரியம் தான். அது தீர்க்கதரிசியின் செய்தியை ஆதாரமாக கொண்டு தான் உள்ளது. இதை தேவனால் தெரிந்துக்கொள்ளப்பட்டவர்கள் மாத்திரமே அறிந்து, புரிந்து கொள்ள முடியும். உங்கள் லௌகிக ஞானம் இது குறித்து ஒன்றும் அறியாது.

**13. இது சத்தியத்தை விசுவாசியாமல் அநீதியில் பிரியப்படுகிற யாவரும் ஆக்கினைக்குள்ளாக்கப்படும்படிக்கு, அவர்கள் பொய்யை விசுவாசிக்கத்தக்கதாகக் கொடிய வஞ்சகத்தை தேவன் அவருக்குள் அனுப்பும் காலமாயிருக்கிறது. 2தெச.2:11, 12. இது கர்த்தருடைய வருகை நேரத்தில் சம்பவிக்கவேண்டிய சம்பவம். 2தெச.2:1. நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் காலம், இந்த கொடிய வஞ்சகம் நிறைவேறி கொண்டிருக்கும் காலமாயிருக்கிறது. அன்று கேட்டின் மகனாகிய யூதாசை, கர்த்தர் அவரைக் காட்டிக் கொடுக்க ஒரு பாத்திரமாக எடுத்து உபயோகித்தது போன்று, உங்களை இக்காலத்துக்குரிய செய்தியில் உள்ள மக்களில் சத்தியத்தை விசுவாசியாமல் அநீதியில் பிரியப்படுகிறவர்களை மோசம்போக்கி, வஞ்சிக்க தகுந்த பாத்திரமாக எடுத்து உபயோகித்து வருகிறார். Dear ones, you are all false annointed ministers. இதை நான் கண்டுக்கொண்டேன்! அல்லேலூயா!! என் மூலமாய்க் கேள்விப்பட்டதை விசுவாசித்தவர்கள் யார்? தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களை நீங்கள் ஒருக்காலும் மோசம்போக்க, வஞ்சிக்க முடியவே முடியாது.**

## *ஒரு முக்கியமான அறிவிப்பு*

1. கோவை, சகோ.கே.ராஜா, இந்நாட்களில் என்னுடைய ஊழியத்தைக் குறித்து விமர்சித்து வருவதை நீங்கள் நன்கு அறிவீர்கள். 15.9.2004 அன்று ஒரு சுற்றறிக்கை வெளியிட்டார். அதற்கு நான் சுருக்கமாக அக்டோபர், 2004 (2) செய்தித்தொகுப்பு **திருமண முத்தம் செய்தித்தொகுப்பிற்கு எதிரான வழக்கு விசாரணையில்** பதில் எழுதியிருந்தேன். அதில் ஒரு சவாலையும் எழுதியிருந்தேன். அதை அவர் கண்டுக்கொள்ளவேயில்லை. மீண்டும் 25.10.2004 அன்று மற்றொரு சுற்றறிக்கை **மூடனுக்கு அவன் மதியீனத்தின்படி மறு உத்தரவு கொடு, கொடுக்காவிட்டால் அவன் தன் பார்வைக்கு ஞானியாயிருப்பான்** என எழுதியுள்ளார். அதில் கர்த்தருடைய இரண்டாம் வருகை பற்றியதான காரியத்திற்கு மட்டும் சுருக்கமான ஒரு தந்திச் செய்தியை இங்கு எழுதியுள்ளேன். கர்த்தர் எனக்கு கொடுத்துள்ள தேவ ஆவியின் பெலத்தினால் ஆண்டவருக்கு சித்தமானால், நானும் உயிரோடிருந்தால், கர்த்தருடைய வருகை காலதாமதமாகுமானால் எப்படியும் இந்த சுற்றறிக்கைக்கு பத்தி, பத்தியாக விளக்கம் கொடுத்து சுற்றறிக்கை ஒன்று வெகு விரைவில் வெளியிடுவேன். அது சரியான வழியில் ஆவியின் அபிஷேகம் பெற்றுள்ளவர்களுக்கும், தவறான வழியில் ஆவியின் அபிஷேகம் பெற்றுள்ளவர்களுக்குமுள்ள வித்தியாசத்தை அறிந்து, புரிந்து கொள்ள ஏதுவாயிருக்கும்.

2. இந்நாட்களில் நான் **கொடிய வஞ்சிப்பின் காலம் - மந்தை - மேய்ப்பன்** என்ற தலைப்பில் ஒரு செய்தித்தொகுப்பு எழுதி முடித்து, அதை கம்ப்யூட்டர் டைப் செய்ய ஆயத்தப்பட்டு வருகிறேன். அடுத்து மிக்க அவசரமான நிலையில் ஏழு தூதர்களின் கூட்டம் அரைமணி நேர அமைதல் இல்லை, அது கர்த்தருடைய வருகையும் அல்ல, அது சகோ.கே.ராஜாவின் ஒரு பேய்த்தனத்துக்கடுத்த உபதேசம் என்பது குறித்து ஒரு செய்தித்தொகுப்பு எழுத கர்த்தருடைய பாதத்தில் அவ்வப்பொழுது அமர்ந்து ஆவியின் வழிநடத்துதலை பெற்று வருகிறேன். அது என்று முடியும் என எனக்குத் தெரியவில்லை. இந்த இரு செய்தித்தொகுப்புகளுக்காக நீங்கள் ஜெபியுங்கள். ஆனாலும் கூடிய சீக்கிரத்தில் சகோ.கே. ராஜா சுற்றறிக்கைக்கு தகுந்த பதில் எழுத முயற்சிக்கிறேன். எனது அனைத்து காரியங்களும் ஆவியானவருடைய வழிநடத்துதலை பொறுத்திருக்கிறது.

3. இந்த இடைவேளையில், நீங்கள் சகோ.கே.ராஜாவின் சுற்றறிக்கைகளை இதுவரை பெறாவிட்டால், அவருடைய இரு சுற்றறிக்கைகளுக்காக அவருக்கு கடிதம் எழுதி பெற்றுக்கொள்ளுங்கள். அவருடைய விலாசம் சகோ.கே.ராஜா, இடிமுழக்க எதிரொலி செய்தி ஊழியம், 5-M/4, ரெட்டியார் காலனி, சிட்கோ போஸ்ட், கோவை 641 021. போன் 936-3146751. இதை ஏன் எழுதுகிறேன் என்றால், நீங்கள் அவரது இரு சுற்றறிக்கைகளை ஒரு கையிலும், அதற்கான எனது பதிலை மற்றொரு கையிலும் வைத்துக்கொண்டு, இருவருடைய சுற்றறிக்கை களையும் சீர்த்தூக்கிப்பார்த்து உண்மை, பொய்; தேவனுடைய ஊழியக்காரன், பிசாசின் ஊழியக்காரன்; Annointed one, false annointed one; தேவ சித்தத்தின்படி ஊழியம் செய்கிறவன், தேவ சித்தத்திற்கு புறம்பாக ஊழியம் செய்கிறவன் யார் என்பதை அறிந்து, புரிந்து அவர்களை அடையாளம் கண்டுகொள்ள ஏதுவாயிருக்கும். ஏனென்றால் இவர் நான் எழுதாதை எழுதினதாகவும், எழுதினதை எழுதாததாகவும்; பேசாததை பேசினதாகவும், பேசினதை பேசாததாகவும்; செய்யாத காரியத்தை செய்ததாகவும், செய்த காரியத்தை செய்யாததாகவும் ஜோடித்து எழுதியுள்ளதை இந்த இரு சுற்றறிக்கைகளிலும் காண்பீர்கள்.

4. சகோ.கே.ராஜா தனது சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுள்ள போதனைகளால் இக்காலத்திற்குரிய செய்தியிலுள்ள மக்களை மோசம்போக்கி கொண்டிருக்கும்போது இவருடன் எனக்கு சமாதானம் ஏது? தனக்கு அளிக்கப்பட்ட தேவகிருபையினால் சுவிசேஷகன் காலேப் யோசுவா 1978 முதல் இதுவரை கள்ள கபடமுள்ள வேலையாட்களுடன், அவர்களுடைய தவறான உபதேசங்களுடன், அவிசுவாசிகளுடன், பாவனை விசுவாசிகளுடன் என்றுமே இணைந்து, இசைந்து சென்றதே கிடையாது. அவர்களை எப்பொழுதுமே எதிர்த்து நின்று வருகிறேன். கர்த்தருடைய வருகை மட்டும் அவ்விதம் எதிர்த்து நிற்பேன். இதில் எந்தவிதமான மாற்றமும் இல்லை. என்னுடைய ஊழியத்தின் அழைப்பு, பொறுப்பு, வழிநடத்துதல் அனைத்தும் என்னை உருவாக்கி தகுதிப்படுத்தியவருடைய கரத்திலிருக்கிறது. சென்னை, சூளைமேடு, இயேசு கிறிஸ்துவின் ஜெப வீடு பாஸ்டர் ஜான் ஐசக் கரத்தில் இல்லை. ஸ்பெஷல், ஹோட்டல், பப்ளிக் மீட்டிங்களில் இல்லை. பந்தா விளம்பரங்களில் இல்லை. மாறாக அது எளிமையில் மறைந்திருந்து எளிமையில் தம்மை வெளிப்படுத்திய என் தேவனுடைய எளிமையில் எளிமையாயிருக்கிறது. அது ஒன்றே எனக்குப் போதும். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

**சகோ. காலேப் யோசுவா**